# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20


காலேப் யோசுவா
4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,
☎: 044 – 26490183 Cell : 9444701953
பூந்தமல்லி, சென்னை – 600 056.


# விவாகத்தில் பெண்கள் அணிந்து கொள்ளும் தாலி
# அர்த்தமுள்ள ஒரு நினைப்பூட்டும்
# அத்தியாவசியமான அடையாளச் சின்னம்

1.கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா, இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2.ஒரு புருஷனுக்கும், **ஒரு ஸ்திரீக்கும் மத்தியில் ஏற்படும் இல்லறவாழ்க்கை ஒப்பந்தம்/ உடன்படிக்கை, விவாகம்/ திருமணம் எனப்படுகிறது.** இது ஆதியில், மனுஷன் பாவம் செய்தாதிருந்த காலத்திலே தேவனால் நியமிக்கப்பட்டது. விவாகம் பண்ணாதே என்பவர்கள் பொய்யர்.1தீமோ.4:2,3. ஆனால் தேவனுடைய நியமத்துக்கு, வார்த்தைக்கு மாறாக விவாகத்தில் சேர்க்கப்பட்டவர்கள் தேவனால் கணவனும், மனைவியுமாக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் செய்த விவாகம், விவாகம் ஆகாது. தேவனாகிய காத்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். ஆதி.2:18. தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரை அடைந்தான்; அவர் அவன் விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையால் அடைத்தார். தேவனாகிய கார்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலாஎலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்; இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். இதிநிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதி. 2:21-24.

3. விவாகம் குறித்து அப்.பவுல் எபிரேயருக்கு எழுதும்போது; விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக என எழுதுகிறான். எபி.13:4. இதை ஆங்கிலத்தில் Marriage is honourable in all, and the bed undefiled. என வாசிக்கிறோம். அதாவது கனமுள்ளது என்று சொல்லப்படும் அனைத்திலும் மேன்மையானது விவாகம். ஆதலால் விவாக மஞ்சத்தை(bed) ஒருவன் அசுசிப்படுத்தக்கூடாது. விவாகத்தை அர்ப்பமாக எண்ணவும் கூடாது. மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதற்காக விவாகம் செய்யக் கூடாது. ஒருவன் விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்திரங்களை எண்ணி, பயபக்தியோடும், விவேகத்தோடும், தகுந்த யோசனையோடும், தெளிந்த புத்தியோடும் தேவனுக்குப் பயந்து விவாகம் பண்ணவேண்டும்.

4. ஒருவன் தன் தகப்பனையும், தன் தாயையும் கனம் பண்ண வேண்டும்.(யாத்.20:12) இளையவர்கள், முதியோரைக் கனம் பண்ண வேண்டும். (லேவி. 19:32) பொதுவாக நாம் எல்லா மனிதர்களையும் கனம் பண்ணவேண்டும்.(1பேது.2:17). அதாவது நாம் ஏற்றத்தாழ்வு இன்றி ஒருவரையொருவர் கனம் பண்ண வேண்டும். நாம் நம் ராஜாக்களை கனம் பண்ண வேண்டும். (1பேது 2:17). அதாவது நாம் நம் நாட்டை ஆளுபவர்களை கனம் பண்ண வேண்டும். ஆனால் விவாகமோ மேற்கண்ட கனத்துக்குரிய அனைத்துக்குள்ளும் கனம் உள்ளது. அதாவது விவாகம் கனத்திற்குரியதான யாவற்றுள்குள்ளும் கனம் உள்ளது. ஏனெனில் திருமணம்/ விவாகம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாயிருக்கிறது.

**5. விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்தரங்களாவன:**

(அ). மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன், அவனுக்கு; அவன் துணையை, அவன் விலாஎலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த விலாஎலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை அவனிடத்தில் கொண்டுவந்து, அவனுக்கு மனைவியாக கொடுத்தார். அதாவது ஒரு ஸ்திரீ இன்றி ஒரு மனுஷன் பூரணபடமுடியாது. ஆம், ஒரு மனுஷன் பூரணப்பட அவனுக்கு ஒரு ஸ்திரீ தேவை. ஏனென்றால் தேவன் தமது சிருஷ்டிப்பின் ஆறாவது நாளில் மனுஷனை ஆணும், பெண்ணுமாக சிருஷ்டித்தார். அவர்களுக்கு மனுஷன் என்று பெயரிட்டார். ஆதி. 5:2.

(ஆ) ஒருவன் விரத்தனாயிருக்க கூடாதிருந்தால் வேசித்தனத்துக்கு விலகி, பாவத்துக்கு தப்பிக்கொள்ளும்படி விவாகம் செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் அசுசிப்படாத அவயவமாக தன்னைக் காத்துக் கொள்ள விவாகம் நியமிக்கப்பட்டது. விவாகமில்லாதவர்களையும், கைம் பெண்களையும் குறித்து

பவுல் எழுதுகிறது என்னவென்றால்; அவர்கள் என்னைப்போல இருந்து விட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும். ஆனாலும் அவர்கள் விரத்தராயிருக்ககூடாதிருந்தால் விவாகம் பண்ணக்கடவர்கள். வேகிரதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம். 1கொரி. 7:8,9.

(இ). கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாக பிள்ளைகளைப் பெற்று, தேவபக்தியில் வளர்க்க, அதாவது தேவனுடைய நாமத்துக்கு மகிமை உண்டாக பிள்ளைகளைப் பெற்று பலுகி பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்தின் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ள விவாகம் ஏற்படுத்தப்பட்டது. நாம் **பலுகிப்பெருகவே ஆசீர்வதிக்கப்பட்டோமேயன்றி. கற்பத்தடைசெய்து தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நோக்கத்தை சீர்குலைப்பதற்கு அல்ல. ஆதலால் தேவனுடைய பார்வையில் கர்ப்பத்தடை செய்யப்பட்ட கர்ப்பம் தேவனால் சபிக்கப்பட்டது. கருதரித்த கர்ப்பத்தை கலைப்பது கொலை பாதகம் ஆகும். கொலை பாதகர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்.** வெளி.21:8. அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாய் இருந்ததே; பின்னை ஏன் ஒருவனைப்படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியை பெரும்படிதானே. ஆதலால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணக்கூடாது. மல்2:15.

(ஈ) தேவன் மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்ததினால், ஒரு ஆண் ஒரு பெண் நன்மையிலும் தீமையிலும், சுகத்திலும் துக்கத்திலும் ஒருவரில்ஒருவர் பெற வேண்டிய அன்பையும், சிநேகத்தையும், ஆறுதல்களையும் அடைய திருமணம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் புருஷர்களும் தங்கள் மனைவியை தங்கள் சொந்த சரீரமாக பாவித்து அவர்களில் அன்புகூர வேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில் தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தை பகைத்தவன் ஒருவனும் இல்லையே; கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தை போஷித்துக் காப்பாற்றுகிறான். உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூறுகிறது போல, தன் மனைவியிடத்திலும் அன்பு கூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாய் இருக்க கடவள். எபே. 5: 28,29,33.

(உ) புருஷன் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்டபடியினால் திருமணம் கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டிக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இப்பூமியில் ஏற்படுத்தப்பட்டது. எபே.5:22-33. ஆனாலும் திருமணம் இம்மைக்குரியது. பரலோகத்தில் கொள்வனையும், கொடுப்பனையும் இல்லை.

**6. ஒரு கிறிஸ்தவ திருமணம் கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டிக்கும்உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இருக்க வேண்டும். எபே.5:22-33.**

(அ) அதாவது சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு, எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். எபே.5:24. நான் அறியும் சில சபைகளில், அதாவது அதிகம் எண்ணிக்கை கொண்ட சபைகளில், வலதுகைக்கும், இடதுகைக்கும்வித்தியாசம் அறியாத சில குடும்பப் பெண்கள், நாங்கள் குடும்ப மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் முதலாவது எங்கள் பாஸ்டர் சொல் மற்றும், ஆலோசனைக் கேட்டு நடப்போம். அதன்பின்தான் எங்கள் கணவர் என்கிறார்கள். பாருங்கள் பிசாசு இவர்களை எவ்வளவு ஆட்கொண்டுள்ளான் என்று? இவர்கள் பிசாசுக்கு அடிமையாயிருக்கிறார்கள். சகோதரியே உன் சொந்த புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் முதலாவது கீழ்படி. அவ்வாறாகவே தேவனுடைய வார்த்தை கூறுகிறது. உன் பாஸ்டரை நம்பி மோசம் போகாதே. உங்கள் பாஸ்டர் தங்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறவர்களாய் இருக்கிறார்கள். ஆதலால் அரசனை நம்பி புருஷனை கைவிட்டுவிடாதே!

(ஆ) கிறிஸ்து சபையில் அன்பு கூருகிறது போன்று, புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்பு கூரவேண்டும். ஆனால் இந்நாட்களில் சபையில் அநேகர் சபைக்கு வரும் சகோதரிகளிடத்தில் அன்பு கூருவதுபோல தங்கள் மனைவிகளிடத்தில் அன்பு கூருவது இல்லை. சபையில் சகோதரி, சகோதரி என்கிறார்கள். ஆனால் தன் மனைவியையோ போடி, வாடி என கொச்சை வார்த்தைகளினால் அழைக்கிறாகள். ஆம், பிசாசு கடுமையாக சபைக்குள் நுழைந்து வல்லமையாக பெண்களிடம் கிரியை செய்து வருகிறான். பாஸ்டர் கூலிக்கு மாரடிக்கிறவராக இருப்பதால், அவர் இதையெல்லாம் கண்டுகொள்ளுவது இல்லை. இங்கு நான் எழுதுவது பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சபையில் நடந்த சம்பவம். இந்த சபையில் ஒரு கல்லூரி பட்டதாரி வாலிபனும், மூன்று/ நான்கு பிள்ளைகள் பெற்ற ஒரு ஸ்திரீயும் பிரதர், பிரதர்; சிஸ்டர், சிஸ்டர் எனக் கூறி மிக்க நெருக்கமாக பழகி வந்தார்கள். நான் ஒரிரு முறை இதை பாஸ்டரிடம் கூறி அவரை கண்டித்தேன். பாஸ்டர் அதை அசட்டை செய்தார். முடிவில் அந்த வாலிபன் அந்த ஸ்திரீயை கூட்டிக்கொண்டு ஓடிச் சென்றுவிட்டான், தலைமறைவு ஆனான். தெருமக்கள் பாஸ்டரை வெற்றிலைப்போட்டு காரித்துப்பி இங்கிருந்து ஓடு, இங்கு நீ சபை நடத்த வேண்டாம் என்று கூறினார்கள். பாருங்கள் இது ஒரு உண்மை சம்பவம். இதுதான் இன்றைய சபைகளின் நிலை. ஆதலால் நீங்கள் சார்ந்திருக்கும் சபையைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். பாருங்கள் புருஷர்கள் தங்கள் மனைவியை தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூர வேண்டும். தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்பு கூருகிறான். தன் சொந்த மாம்சத்தை பகைத்தவன் ஒருவனும் இல்லையே!.

(இ) கர்த்தர் சபையை போஷித்து காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்து காப்பாற்ற வேண்டும். (எபே.5:29). புருஷன் ஊழியம், ஊழியம் என ஊர் சுற்ற, மனைவி வேலை செய்து அவளையும் குடும்பத்தையும் போஷித்து காப்பாற்றக் கூடாது. மனைவியும் புருஷனும் வேலை செய்து தங்கள் குடும்பத்தை போஷித்து காப்பாற்றவும் கூடாது. மனைவி தெளிந்த புத்தி உள்ளவளாய், கற்புள்ளவளாய் வீட்டில் தரித்திருக்கவேண்டும். (தீத்.2:5). புருஷன் தன் முகத்தின் வேர்வையினால் சம்பாதித்து தன் குடும்பத்தை போஷித்து காப்பாற்ற வேண்டும். (ஆதி. 3:17-19). இதற்கு மாறான இல்லற வாழ்க்கை தேவனால் நியமிக்கப்பட்டது இல்லை. மாறாக இந்த காரியம் மனுஷர்களால் வந்தது அல்லது திருமண புரோக்கர்களால் வந்தது.

(ஈ) மனுஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருந்து குடும்பம் நடத்த வேண்டும்.

(உ) மனைவி தன் புருஷனிடத்தில் பயபக்தியாய் இருக்கவேண்டும். நீ உன் பாஸ்டரிடம் பயபக்தியாய் நடந்துகொள்வதைவிட உன் புருஷனிடத்தில் அதிக பயபக்தியாய் நடந்துகொள். தேவ வசனம் துஷிக்கப்படும்படி நீ பொது ஸ்தலங்களில் சென்று வேலை செய்து (தீத்.2:4.5) அங்கு நீ உன் முதலாளியிடம் பயபக்தியாய் நடந்துகொள்கிறாய். ஆனால் உன் வேலையைவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் அங்கு உன் புருஷனை அலட்சியப்படுத்துகிறாய். உன் முதலாளியை மதிப்பதுப் போன்று வீட்டில் உன் புருஷனை மதிப்பது இல்லை. அது உனக்கு வெட்கக்கேடு. இந்நாட்களில் சாப்ட்வேர் கம்பெனிகளில் வேலை செய்யும் பெண்கள் தங்கள் புருஷனைவிட அதிகமாக சம்பாதிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் தங்கள் புருஷர்களை ஆட்டிப்படைப்பதை நான் பல குடும்பங்களில் கண்டிருக்கிறேன். ஆதலால் பலர் விவாகரத்து செய்கிறார்கள். மனைவி புருஷனைவிட அதிகம் சம்பாதிப்பதால் நீ என்ன சொல்ல நான் என்ன கேட்க என்று கேட்கும் அளவுக்கு ஆணவமும், திமிரும் பெண்களில் குடிகொண்டுள்ளதைக் காண்கிறேன். பெண்கள் சம்பாதிப்பதினால் தங்கள் புருஷர்களை மட்டுமல்ல தங்கள் சமுதாயத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள். இதனால்தான் தேவனுடைய வார்த்தை பெண்கள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாய் இருக்கவேண்டும் என்று கூறுகிறது.

7. இந்நாட்களில் ஒரு தரகன் தான் ஒரு ஆணையும், பெண்ணையும் விவாகமஞ்சத்தில் சேர்த்து வைக்கின்றான். அல்லது அழகு சேர்த்து வைக்கிறது. அல்லது வரதட்சனை இணைத்து வைக்கிறது. அல்லது படிப்பு, அந்தஸ்து அவர்களை விவாக மஞ்சத்துக்கு கொண்டுவருகிறது. இவ்வாறாக நியமிக்கப்படும் விவாகங்களை **இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது** என்று கூறுகிறார்கள். இந்த வெட்கக்கேட்டை என்னவென்று கூறுவது? தேவனுடைய வார்த்தையே ஒரு ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைக்கவேண்டும். தேவன் ஆதாமுக்கு ஏவாளை கொடுத்ததுப் போன்று தேவனே ஒரு ஆணையும், பெண்ணையும் திருமணத்தில் சேர்த்து வைக்கவேண்டும். தேவன் சேர்த்து வைக்கும்போது அவர்கள் இல்லற வாழ்க்கை ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையாக முடியும். அது தான் என் இல்லற வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம். ஆம், அவர்கள் தேவனுடைய வார்த்தையில் நிலைத்து நிற்க வேண்டும். தேவனுடைய வார்த்தை அவர்களை ஆழ்கொள்ள வேண்டும். அவர்கள் தேவனுக்கு முற்றிலுமாக கீழ்ப்படிதல் உள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

**8. விவாகத்தில் ஆண்களினால் பெண்களுக்கு அணியப்படும் தாலி தேவையானதுதானா? அல்லது தேவை இல்லாத ஒன்றா? இது ஒரு பெரிய சர்ச்சையாக இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்கள் மத்தியில் காணப்படுகிறது. ஸ்தாபன சபை மக்களில் தென் இந்திய திருச்சபை மற்றும் ஏழாம் நாள் திருச்சபையை சேர்ந்தவர்கள் தாலி அணிகின்றனர். அசெம்ளி ஆப் காட் சபையைச் சேர்ந்தவர்களில் அணிபவர்களும் உண்டு, அணியாதவர்களும் உண்டு. தி பெந்தெகொஸ்தே சபையில் அணிவது கிடையாது. இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்கள் மத்தியிலும் அணிபவர்களும் உண்டு, அணியாதவர்களும் உண்டு. இப்படியாக தாலி அணியும் காரியத்தில் ஒரு குழப்பம் சபைகளில் காணப்படுகிறது. ஆக தாலி குறித்து சபைக்கு, சபை வித்தியாசமான போதனைகள் உண்டு.**

9. நமது மத்தியில் இரு சபைகள் உள்ளன. ஒன்று கள்ள சபை. மற்றொன்று உண்மையான சபை. கள்ள சபை மகா வேசியாகிய (வெளி.17:1) ஏழு மலைகளின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்த ஸ்திரீயாகிய (வெளி 17:9) கத்தோலிக்க திருச்சபையையும், அவளுடைய குமாரத்திகளாகிய தென்னிந்திய திருச்சபை, மெத்தடிஸ்ட் சபை, ஏழாம் நாள் திருச்சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை, தி பெந்தெகொஸ்தே சபை, அசெம்ளி ஆப் காட் போன்ற ஸ்தாபன சபைகளை குறிக்கிறது. இவைகள் யாவும் திரித்துவ உபதேசத்தில் கட்டப்பட்டுள்ளன. அதாவது அதநாஷியஸ் என்பவரது உபதேசத்தை இவர்கள் கைக்கொள்கிறார்கள். அதாவது; ஏகதேவனைத் திரித்துவமாகவும்; திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்க வேண்டும். பிதா ஒருவர், குமாரன் ஒருவர், பரிசுத்த ஆவி ஒருவர். பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவி தேவன். ஆகிலும் மூன்று தேவர்கள் அல்ல. தேவன் ஒருவரே. அப்படியே பிதா கர்த்தர், குமாரன் கர்த்தர், பரிசுத்த ஆவி கர்த்தர். ஆகிலும் மூன்று கர்த்தர்கள் இல்லை. கர்த்தர் ஒருவரே. இம்மூவரில் ஒவ்வொருவரும் தனித்தனியாக தேவன் என்றும், கர்த்தர் என்றும் அறிக்கையிடப்பட வேண்டும். இப்படியாக இது நீண்டுகொண்டே போகிறது. இதை வாசிக்கும்போதே இது பிசாசின் உபதேசம் என்பதை தேவனுடைய ஆவியைப் பெற்றவர்கள் ஆவியில் உணர்ந்து கொள்வார்கள்.

10. தேவத்தும் குறித்து உங்களுக்கு விளக்க நான் இங்கு வரவில்லை. ஆதலால் இது குறித்து இங்கு அதிகம் எழுதவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நான் அறிவேன். யாக்கோபு: தேவன் ஒருவர் (யாக்.2:19), பவுல் : தேவபக்திக்குரிய ரகசியமாவது : தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். (1தீமோ.3:16). தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோ. 2:9). யோவான்: ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (1யோ. 5:20). பாருங்கள் தேவத்துவம் குறித்து மூவர் சாட்சி கொடுக்கிறார்கள். ஒன்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு இரண்டாவது அப்போஸ்தலனாகிய பவுல், மூன்றாவது அப்போஸ்தலனாகிய யோவான். இதைவிட வேறு எந்த சாட்சியும் எனக்கு தேவையில்லை. ஏனென்றால் வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டு இருக்கிறது. (2தீமோ. 3:16). ஆதலால் தேவஆவியினால் அருளப்படாத (ஏனென்றால், தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். 1கொரி. 2:11) மனுஷனிலுள்ள ஆவியைக் கொண்டு எழுதப்பட்ட (ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரிவைகளை ஏற்றுக்கொள்ளான்) இந்த அதநாஷியஸ் உபதேசம் நமக்கு தேவையில்லை. அது பிசாசு. இந்த பிசாசின் உபதேசத்தின் மேல்தான் உங்கள் ஸ்தாபன சபைகள் யாவும் / கள்ள சபைகள் யாவும் கட்டப்பட்டு இயங்கிவருகின்றன.

11. அடுத்து உண்மையான சபை, இவள் கற்புள்ள கண்ணிகை கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமிக்கப்பட்டவள். 2கொரி 11:2. இவள் ஒரே தேவன் உண்டு. அவர் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இவரே பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழு குடும்பத்துக்கும் நாமகாரணர் என்று விசுவாசிப்பவள். (எபே 3:14,15. பிலி. 2:10,11) பாருங்கள் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும் (இங்கு கவனியுங்கள்: தேவன் ஒருவர், பிதா ஒருவர் அல்ல. தேவனும் பிதாவும் ஒருவரே. ஆதலால் தான் அவர் என்று ஒருமையில் கூறப்பட்டுள்து. இது ஒரே தேவன் இருத்துவத்திலும், இருத்துவத்தில் ஏக தேவனும் இல்லை) அவர் எல்லார் மேலும் அக்கினி ஸ்தம்பத்தில், மேக ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். பின் அதே தேவன் குமாரனாக நம்மெல்லாரோடும் இருந்தார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு மனுஷகுமாரனாக நம்மோடு வளர்ந்தார், புசித்தார், தூங்கினார், நடந்தார், ஊழியம் செய்தார். காலம் நிறைவேறினபோது நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய இரத்தத்தை சிந்தினார், மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார். உயிர்த்தெழுந்தார். இப்பொழுது: அதே தேவன் பரிசுத்த ஆவியாக இருக்கிறார். தியானியுங்கள் கலா. 4:6. ஆக ஒரே தேவன் பிதாவாக அக்கினி ஸ்தம்பத்தில், அதே தேவன் குமாரனாக நம்மோடு, பின் அதே தேவன் பரிசுத்த ஆவியாக இப்பொழுது நமக்குள். இது தேவனை மூவராக்கிவிடாது. அவர் ஒருவரே. தேவன் மூன்று நிலைகளில் காணப்படுகிறார். ஆம் தேவன் ஒருவரே. ஆதலால் திரித்துவ உபதேசம் பிசாசினுடையதே.

12. ஆக ஒரே தேவன், பிதா குமாரன் பரிசுத்த ஆவியாக நம்மோடு, மனுக்குலத்தோடு இடைபடுகிறார். பிதா குமாரன் பரிசுத்த ஆவி ஒரே தேவனுடைய தன்மைகள். என்னிடத்தில் பிதா குமாரன் சுவிசேஷகன் என்ற மூன்று தன்மைகள் உண்டு. அதே தன்மை உங்களிடத்திலும் இருக்கலாம். அது என்னையும் உங்களையும் மூவராக்கி விடாது.

13. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். எபி.13:8. இயேசு இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர். இவர் நாம் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார். (வெளி1:8)

14. அடுத்து தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்குள் தேவத்துவம் பரிபூரணமென்றால், பின் அவரே அந்த ஒன்றான மெய்த்தேவன். அவரோடு வேறுயாரும் கிடையாது. தேவத்துவத்தை குறித்த காரியம் இப்படியிருக்க கிறிஸ்து தேவத்துவத்தில் ஒருவர் என்று எப்படி கூறமுடியும்? அப்படி கூறுகிறவன் யார்? அவன் பிசாசுதான். திருத்துவம் ஒரு பிசாசின் உபதேசமே. உங்கள் ஸ்தாபன சபைகள் யாவும் பிசாசினாலே இயக்கப்பட்டு, இயங்கிவருகிறது.

15. அப்போஸ்தலர் உபதேசம் என்ன? அவர்கள் கிறிஸ்து இயேசுவை கர்த்தர் என்று உபதேசம் பண்ணினார்கள். (2கொரி 4:5) சங்கீதக்காரன் : கர்த்தரே தேவன் என்று அறியுங்கள் என்கிறான். சங்.100:3. ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தேவன் என்று வேதவாக்கியங்கள் கூறுகிறது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவத்துவத்தில் மூவரில் ஒருவர் என கள்ள சபை போதிக்கிறது. இப்பொழுது கள்ள சபைக்கும், உண்மையான சபைக்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

16. ஆக உண்மையான சபை தேவன் ஒருவரே, அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (கர்த்தர்-பிதா, இயேசு - குமாரன், கிறிஸ்து- பரிசுத்த ஆவி )என விசுவாசிக்கிறது. ஆனால் உண்மையான சபையில் இரு கன்னிகைகள் உண்டு. ஒன்று புத்தியுள்ள கன்னிகை, மற்றொன்று புத்தியில்லாத கன்னிகை (மத்.25:2). புத்தியுள்ள கன்னிகை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்று, தேவனுடைய வார்த்தையில் இக்காலத்திற்குரிய செய்தியில் உண்மையும் உத்தமுமாய் காணப்பட்டு, அதில் நிலைத்திருக்கிறாள். புத்தியில்லாத கன்னிகை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறாததினால் தேவனுடைய வார்த்தையை,

இக்காலத்திற்குரிய செய்தியை முற்றிலுமாக விசுவாசிக்காது, அதில் உறுதியாக நிலைத்திருக்காது காணப்படுகிறாள். ஓ! இது கடினமான உபதேசம். யார் இதில் நிலைத்திருப்பார்கள் என்கிறாள். தங்கள் கிரியைகளினால் தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு முரணாக செயல்படுகிறாள். தன்னை முற்றிலுமாக தேவனுடைய வார்த்தைக்கு இக்காலத்திற்குரிய செய்திக்கு ஒப்புக்கொடுப்பது இல்லை. ஆனாலும் இவர்கள் கன்னிகைகள்தான். இவர்கள் நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் வரை கடந்து வந்த கன்னிகைகள். இவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்கு கடந்து வரவில்லை.

17. **கள்ள சபையைச் சார்ந்த பெந்தெகொஸ்தே சபையினர் விவாகத்தில் பெண்கள் தாலி அணியக்கூடாது என்ற ஒரு கள்ள உபதேசத்தை கொண்டுள்ளார்கள். உண்மையான சபையில் உள்ள புத்தியில்லாத கன்னிகைகளும் இவள் உபதேசத்தில் இழுப்புண்டு போனார்கள்.**

18. இப்பொழுது இங்கு நாம் திருமணத்தில் ஒரு ஆண், ஒரு பெண்ணுக்கு தாங்கள் திருமணத்தில் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாக ஆண் பெண்ணுக்கு தாலி அணிவிப்பது தேவைதானா அல்லது இல்லையா என்பது குறித்து தியானிப்போம்.

(அ) **நீ ஒருவனுடைய மனைவி என்பதற்கு நீ அணிந்துள்ள தாலி ஒரு அடையாளம்.**
நீ கிறிஸ்துவினுடைய மனவாட்டி என்பதற்கு நீ பெற்றுள்ள பரிசுத்த ஆவி ஒரு அடையாளம்.

(ஆ) பாருங்கள் புருஷன், ஸ்திரீக்கு விவாக அடையாளத்தை (தாலியை) அணியும் நிலையில் அவன் கூறுவதாவது: நான் இன்று விவாக நிலையில் உன்னோடு ஒருமித்து வாழ தேவசமுகத்தில் தேவனுடைய சபையில் உன்னோடு செய்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தவும், அதற்கு அடையாளமாகவும் இந்த மாங்கல்யத்தை உனக்கு அணிக்கிறேன் என்கிறான்.

நீ கிறிஸ்துவோடு செய்த நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக நீ தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நாம் பெற்றுக்கொண்டாய். அது ஒரு வெளிப்புற அடையாளம்.

(இ) ஒரு அடைளானம் ஒரு உடன்படிக்கைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. தேவனோடு செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாகிய ஞானஸ்நானம் தேவையில்லையென்றால் உன் விசுவாசம் வீண். அதுபோல திருமணத்தில் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி தேவையில்லை என்றால் அவர்கள் செய்த உடன்படிக்கை வீண்.

(ஈ) அடைளாளம் இல்லை என்றால் உடன்படிக்கை சக்தியற்றதாகிவிடுகிறது.

(உ) அடையாளம் இல்லாதவரைக்கும் உடன்படிக்கையும் அங்கு இல்லை.

(ஊ) தாலி ஒருஅடையாளம். பாருங்கள் அதற்கு ஒருஅர்த்தம் உண்டு.
பரிசுத்த ஆவி ஒரு அடையாளம். பாருங்கள் அதற்கும் ஒரு அர்த்தம் உண்டு.

(எ) நீ அணிந்துள்ள அடையாளத்தை மற்றவர்கள் காணும்படி பகிரங்கமாக அதை வெளிப்படுத்தவேண்டும்.

கிறிஸ்துவின் மணவாட்டி தான் பெற்ற பரிசுத்த ஆவியை மற்றவர்கள் காணும்படி அதை ஆவியின் வரங்களினாலும், கனிகளினாலும் தன்னை பகிரங்கமாக வெளிப்படுத்தவேண்டும்.

(ஏ) நீ, நான் ஒரு ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபையை சார்ந்தவன். நான் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறேன். நான் அந்நியபாஷை பேசுகிறேன் என்று கூறலாம். ஆனால் அது ஒரு காரியம் அல்ல. உடன்படிக்கைக்குரிய அடையாளமாகிய பரிசுத்த ஆவி உன்னிடம் வரங்களினாலும், கனிகளிளாலும் வெளிப்படவேண்டும். அதுவே காரியம்.

19. **திருமண வேளையில் ஒரு ஆண் ஒரு பெண் தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன்படிக்கைக்கு அடையாளமாக ஆண், பெண்ணின் கழுத்தில் தாலி அணிவிக்கிறான்.**

20. யோனத்தான் தன் உயிரை சிநேகித்ததுபோல தாவீதை சிநேகித்தான். 1.சாமு.20:17 யோனத்தான் தாவீதை தன் ஆத்துமாவைப்போல் சிநேகித்ததினால் அவனும் இவனும் உடன்படிக்கை செய்து கொண்டனர். 1.சாமு.18:3. யோனத்தான் யுத்தத்தில் விழுந்துபோன போது தாவீது பாடினதாவது: நீ எனக்கு வெகு இன்பமாய் இருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாய் இருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தைப் பார்க்கிலும்அதிகமாய் இருந்தது. 2.சாமு.1:26. மேற்கூறிய வசனங்கள் தாவீதுக்கும் யோனத்தானுக்கும் உள்ள உறவை, சிநேகத்தை எடுத்துக் காட்டுகிறது. இவர்கள் இருவரும் செய்து கொண்டி உடன்படிக்கை என்ன? அதாவது: யோனத்தான் சீப் வனாந்திரத்தில் உள்ள காட்டில் இருக்கிற தாவீதினிடத்திற்கு போய், தேவனுக்குள் அவன் கையை திடப்படுத்தி; நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டு பிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேல் மேல் இராஜாவாயிருப்பீர்: அப்பொழுது நான் உமக்கு இரண்டாவது இருப்பேன் என்பதே. அவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்பாக

உடன்படிக்கை பண்ணினபின்பு தாவீது காட்டில் இருந்து விட்டான்; யோனத்தான் தன் வீட்டிற்கு போனான். 1சாமு.23:15-18.

21. இதற்கு அடையாளமாக யோனத்தான் தான் போர்த்திக்கொண்டிருந்த சால்வைகளை கழற்றி, அதையும் தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும் கூடத் தாவீதுக்கு கொடுத்தான். 1சாமு. 18:3,4.

22. பாருங்கள் விவாகத்தில் ஈடுபடும் ஒரு ஆண், ஒரு பெண் ஆத்துமா ஒருவரோடு ஒருவர் இசைந்திருக்கிறது. எவ்வாறு? யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது போன்றது. அடுத்து திருமணத்தில் இணையும் தம்பதிகள் ஒருவரை ஒருவர் தன் உயிரைப்போல் நேசிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் இருவர் அல்ல, அவர்கள் இருவராய் இருந்தாலும் ஒரே சரீரமாய் இருக்கிறார்கள். பாருங்கள், எவ்வாறு யோனத்தான் தாவீதை தன் உயிரைப்போல சிநேகித்தானோ, அவ்வாறாகவே இவர்களும் ஒருவரை ஒருவர் தன் உயிரைப்போல் நேசிக்கிறார்கள். ஆக இருவரும் தங்கள் திருமணத்தில் யோனத்தான், தாவீது செய்த உடன்படிக்கையைப் போன்று ஒரு உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள் அது என்ன?

23. **புருஷன் என்ன உடன்படிக்கை செய்கிறான்?** அவன் தன் மனைவியைப்பார்த்து: இன்று முதல் ( விவாகம் செய்யும் நாள் முதல்) நான் உன்னை எனக்கு விவாகமனைவியாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி, நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும், மரணம் நம்மை பிரிக்கும் அளவும் நான் உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் வாக்கு கொடுக்கிறேன். நான் உன்னை விவாகம் செய்து என் சரீரத்தினாலே உன்னை மேன்மைப்படுத்தி, எனக்கு உண்டான லோக ஆஸ்திகளை எல்லாம் உனக்கு சுதந்தரமாக கொடுக்கிறேன். உன்னை நேசித்து, ஆதரித்து, கனப்படுத்தி, காப்பாற்றி நாம் இருவரும் உயிரோடு இருக்கும் அளவும் அடுத்த பெண் முகம் பார்க்கமாட்டேன். உன்னை தள்ளிவிட்டு மறுமணம் செய்து கொள்ள மாட்டேன். நான் உனக்கு என் மரணமளவும் புருஷனாய் இருப்பேன் என்கிறான்.

24. **மனைவி என்ன உடன்படிக்கை செய்கிறாள்?** அவள் தன் புருஷனைப்பார்த்து: இன்றுமுதல் (விவகம் செய்யும் நாள்முதல்) நான் உம்மை எனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மை பிரிக்குமளவும் உம்மை நேசிக்கவும், ஆதரிக்கவும், சபை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல நான் உமக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவும் வாக்குக் கொடுக்கிறேன் என்கிறாள். மேலும் உம்மை நேசித்து, ஆதரித்து, கனப்படுத்தி நாம் இருவரும் உயிரோடிருக்கும் அளவும் அடுத்த ஆண்முகம் பார்க்காமல் என் மரணமளவும் உமக்கே மனைவியாய் இருப்பேன் என்கிறாள்.

25. ஆக, இவ்வாறாக இவர்கள் இருவரும் தேவ சமூகத்தில், திருச்சபையின் முன்பாக செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு அடையாளமாக ஆண், பெண்ணுக்கு தாலி அணிவிக்கிறான். இது அவர்கள் செய்துக்கொண்ட உடன்படிக்கையை எப்பொழுதும் நினைப்பூட்டும் அர்த்தமுள்ள அத்தியாவசியமான ஒரு அடையாளச் சின்னமாக இருக்கிறது.

26. **திருமணத்தில் அடையாள சின்னமாக ஒன்றை (தாலியை) பெண் ஏன் அணிந்துகொள்ள வேண்டும்?**

அ. இது திருமணத்தில் ஒரு ஆண், ஒரு பெண் தங்களுக்குள் தேவசமூகத்தில் திருசபைக்கு முன்பு, தங்கள் உடன்பிறப்பு, உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செய்துகொள்ளும் நல்மனச்சாட்சியின் ஒப்பந்தத்தை, உடன்படிக்கையை உறுதிப்படுத்தும் ஒரு அடையாளமாக இருக்கிறது.

ஆ. இது ஒரு நினைப்பூட்டும் அடையாளம். இல்லற வாழ்க்கையில் பாடுகள், பிரச்சனைகள் இருவருக்குள் வரும்போது இந்த அடையாள சின்னம் அவர்கள் திருமண நாள் அன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தை, உடன்படிக்கையை நினைப்பூட்டுகிறது, நியாயந்தீர்க்கிறது.

இ. உடன்படிக்கைக்கு ஓர் அடையாளம் தேவை. அந்த அடையாளம் இல்லையெனில் அந்த உடன்படிக்கை அர்த்தமற்றதாகிவிடுகிறது. உடன்படிக்கை சக்தியற்றதாகிவிடுகிறது.

ஈ. ஒரு பெண், தான் திருமணம் செய்யும் ஆணுடைய சரீரத்தின் ஒரு பாகமாக ஆகிவிடுகிறாள் என்பதற்கு அடையாளமாக இது இருக்கிறது. அவளை தன் சரீரத்தின் ஒருபாகமாக ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக அந்த ஆண் அந்த பெண்ணுக்கு தாலியை அடையாளமாக அணிவிக்கிறான். பெண் ஆணுக்கு தாலி அணியவேண்டும் என்ற தேவைஇல்லை. ஏனென்றால் ஆணின் ஒரு பாகமாகத்தான் பெண் இருக்கிறாள். ஆண் பெண்ணை தன் சரீரத்தோடு இணைத்துக் கொள்கிறான். இருவரும் ஒரே சரீரமாகிறார்கள். இதற்கு அடையாளமாக தாலி அணிவிக்கிறான். தாலி அணிந்த பெண் தான் ஒரு மனிதனுடைய சரீரத்தின் பாகம் என்பதை வெளியரங்கமாக தெரிவிக்கிறாள். அந்த அடையாளத்தை அவள் இரவும், பகலும் தன் வாழ்நாள் முழுவதும் அணிந்துகொண்டிருப்பாள். அதாவது எந்த

வேளையிலும் அந்த அடையாளத்தை உடையவளாய் காணப்படுவாள். அவள் அதை கழற்றவே மாட்டாள். அவள் எந்த சரீரத்தின் ஒரு பாகமோ அந்த சரீரம் அதாவது அவளுடைய புருஷன் மரிப்பானாயில் அவள் அவன் அணிவித்த அந்த அடையாள சின்னத்தை கழற்றி விடுகிறாள் ஏனென்றால் அவனுடைய பிரமாணத்திலிருந்து விடுபடுகிறாள்.1கொரி. 7:39

உ. அவள் அந்த அடையாளத்தை அணிந்திருக்கும்போது ஒரு புருஷனுடைய பிரமாணத்துக்கு முற்றிலும் கீழப்படியும் நிலைக்கு வந்துவிட்டாள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் உங்கள் கையிடம் இதோ இந்த பொருளை எடுத்துக் கொடு என்று கேட்க, கட்டளையிட அது உடனே அதற்கு கீழப்படிகிறது. ஏனென்றால் அது உங்கள் சரீரத்தின் ஒரு பாகம். அவ்வாறாகவே நீங்கள் உங்கள் சரீரத்தின் ஒரு பாகமாகிய உங்கள் மனைவியிடம் ஒரு காரியத்தை செய்ய கேட்கும்போது, கட்டளையிடும்போது அவள் அதற்கு கீழ்ப்படிகிறாள். ஏனென்றால் அவள் உங்கள் சரீரத்தின் ஒரு பாகம். கணவனும் மனைவியும் இருவர் அல்ல. அவர்கள் இருவராக தோன்றினாலும் ஒரே சரீரமாக காணப்படுகிறார்கள். அதாவது நீங்களும் உங்கள் மனைவியும் ஒருவர் அன்றி இருவர் அல்ல.
அவள் அந்த அடையாளசின்னத்தை அணிந்துகொண்டு, தன் ஒரு மனிதனுடைய சரீரத்தின் பாகமாக இருக்கிறாள் என்பதை வெளியரங்கமாக எடுத்துக்காட்டுகிறாள். அதோடு மட்டுமல்ல, விவேகத்துடன் அவனோடு வாழ்ந்து அவனோடு நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக் கொள்ளக் கூடியவள் என்பதை உறுதிப்படுத்துகிறாள். 1 பேது. 3:7.

27. ஆதாம் ஏவாள் திருமணத்தின் போது ஆதாம் ஏவாளுக்கு தாலி அணிவித்ததாக பரிசுத்த வேதாகமத்தில் ஆதாரம் ஏதுவும் இல்லை, ஆபிரகாம் சாராளை திருமணம் செய்தபோது மோதிரம் மாற்றிக்கொண்டார்களா? ஈசாக் ரெபெக்காளை திருமணம் செய்த போது மஞ்சள் கயிறு கட்டினானா? என்று வேதாந்தம் பேசும் வீணர்கள் நம் மத்தியில் உண்டு. இவர்கள் சபையில் களைகளை விதைக்கும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள். இவர்கள் கூற்றுப்படி மேற்கண்டவர்கள் பைபிள் மாற்றிக்கொண்டதாக வேதாகமத்தில் ஆதாரம் எங்கே இருக்கிறது? பைபிள் மாற்றிக்கொண்டதாக ஆதாரம் இல்லாத சமயத்தில் இவர்கள் எவ்வாறு பைபிள் மாற்றிக்கொள்கிறார்கள்? உடன்படிக்கைக்கு அடையாளம் இன்றி வாழும் இல்லற வாழ்க்கை விவாகத்தை தாருமாறாக்கும். கிறிஸ்துக்குள்ளான ஆண் பெண் வார்த்தையாக இருப்பதால், வார்த்தையை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வது ஒரு உடன்படிக்கைக்கு அடையாளமாகாது.

28. வெளிப்புற அடையாளம் இல்லாத உடன்படிக்கை ஒரு உடன்படிக்கையாகாது. ஒப்பந்தமும் ஆகாது. திருமணத்தில் செய்த உடன்படிக்கைக்கு அடையாளம் இன்றி வாழும் விவாகநிலை, விவாகத்தை தாருமாறாக்கும். திருமண அடையாளம் மோதிரமாக இருக்கவேண்டும் அல்லது செயினாக இருக்க வேண்டும், அது தங்கத்தினால், கருப்பு பாசிமணிகளினால் அல்லது மஞ்சள் கயிற்றினால் இருக்கவேண்டும் என்பது முக்கியமல்ல. அது நீங்கள் வசிக்கும் இடத்தில், உங்கள் சமுதாயத்தில், உள்ள ஒரு ஒழுங்குமுறைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். ஆதியில் திருமண வேளையில் செய்யும் ஒப்பந்தத்திற்கு ஒரு அடையாளம் இருந்தது. அது திருஷ்டாந்தமாக நமக்கு எழுதிவைக்கப்பட்டுள்ளது In the Bible they wore wedding rings. It was a tablet, they called it என தீர்க்கதரிசி தம்முடைய கே.ப 283ல் கூறுகிறார்.

29. இங்கு மற்றொரு காரியத்தையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். ஒரு ஸ்திரீ ஏதாவது ஒரு ஆபரணம் அணிந்திருந்தால் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கமாட்டோம் என நமது ஸ்தாபன பெந்தெகொஸ்தேயினர் கூறுகிறார்கள். இது அவர்களுடைய சுயநீதி. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக பாடுபட்டு, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என விசுவாசிக்கும் ஒருவன் தன் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெறுகிறான். அதற்கும் அந்த நபர் அணிந்துள்ள ஆபரணத்திற்கும் எந்த விதமான சம்பந்தமே இல்லை. அது அவர்களுடைய சுயநீதி. நமக்கு தேவனுடைய நீதி ஒன்றே தேவை. யாருடைய சுயநீதியும் நமக்கு தேவையில்லை. தேவனுடைய இராஜ்யத்துக்கடுத்த காரியங்களில் நாம் சுயநீதியாக எதையும் உற்பத்தி செய்ய வேண்டிய தேவையில்லை, சுயநீதியை உற்பத்தி செய்யவும் கூடாது.

30. **திருமண அடையாளம் அணிவது குறித்து இக்காலத்திற்குரிய செய்தி என்ன கூறுகிறது?**
அ. Today, if a woman is married, she should were a wedding ring as a sign that she's got married. That's to keep other man from having anything to do with her. They look and they see she's a married woman (**The second coming of the Lord**, Para 56)

ஆ. In those days day didn't have wedding rings, they had a tablet, they put it on their head. It had 10 coins and it went around their head. And that was a sign they were a married woman. Each coin meant certain virtue of that woman. (**The Second coming of the Lord** para 57,58)

31. பாருங்கள் இந்நாட்களில் ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதற்கு அவள் ஒரு திருமண மோதிரத்தை தான் அணியவேண்டும் என்பதல்ல. தீர்க்கதரிசி இங்கு திருமண மோதிரத்தை

குறிப்பிடுகிறார். ஏனென்றால் அவர் நாட்டின் வழக்கம் திருமணத்தில் மோதிரம் மாற்றிக்கொள்ளுவதாகும். பெண் ஆணுக்கு மோதிரம் அணிவிப்பாள். ஆண் பெண்ணுக்கு மோதிரம் அணிவிப்பார். தீர்க்கதரிசி அவர் நாட்டு கலாச்சாரத்தின் அடிப்படையில் கூறுகிறார். நாம் அவர் நாட்டு கலாச்சாரத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவையில்லை. நம் நாட்டு கலாச்சரம் ஆண் பெண்ணுக்கு தாலி அணிவிப்பது. ஆதலால் நாம் யாரையும் மோதிரம்/ தாலி தான் அணியவேண்டும் என கட்டாயப்படுத்தக்கூடாது. அவரவர் சமுதாயத்தில் எப்படிப்பட்ட அடையாளத்தை அணிவிக்கிறார்களோ அதிலே ஒருவர் நிலைத்திருந்தால் போதும். திருமணச் சின்னம் என்று ஒன்று அணியவேண்டும். அதுதான் முக்கியம் மற்றும் நோக்கம். ஆனால் அது அவரவர் நாட்டுக் கலாச்சாரத்தைப் பொறுத்தது. அதில் எந்தவிதமான வாக்குவாதமும் கூடாது. இங்கு தீர்க்கதரிசி she should wear என்று கூறுகிறார். அதாவது அவர் பெண் திருமணத்தில் திருமண அடையாள சின்னம் ஒன்றை அணிந்துகொள்ள வேண்டும். அது மற்றொரு மனிதன் அவளிடம் தகாதமுறையில் நடந்துகொள்வதை தவிர்ப்பதற்கு ஆகும் என்று கூறுகிறார்.

32. பாருங்கள் அந்நாட்களில் அவர்கள் திருமண மோதிரத்தை அணிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் **தலைமாலை** என்ற ஒன்றை அணிந்திருந்தனர். அதை அவர்கள் தங்கள் தலையை சுற்றி அணிவது வழக்கம். அது அவள் திருமணமானவள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அந்த தலைமாலையில் பத்து வெள்ளிக்காசு பதிக்கப்பட்டு இருந்தது. அவைகள் ஒவ்வொன்றும் ஒரு பெண் பத்திரப்படுத்தி பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பத்துவிதமான கற்புகளை கூறுகிறதாக இருக்கிறது.

33. பாருங்கள் இதிலிருந்து தீர்க்கதரிசி திருமண அடையாளத்திற்கு எத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நீங்கள் புரிந்து, அறிந்து கொள்ளலாம். உங்களால் முடிகிறதா? பத்து வெள்ளிக்காசு குறித்த உவமை என்ன? சகல ஆயக்காரரும் பாவிகளும் இயேசுவினுடைய வசனங்களை கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது இயேசு 10 வெள்ளிக்காசு குறித்த உவமையை அவர்களுக்கு கூறுகிறார். அதாவது ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசுகளை உடையவளாக இருந்தாள். அதில் ஒன்று காணாமற்போய்விட்டது. அவள் விளக்கை கொளுத்தி, வீட்டைப் பெருக்கி அதை கண்டுபிடித்தாள் பின் சிநேகிதிகளையும் அயல்வீட்டுகாரிகளையும்கூட தன் வீட்டுக்கு வரவழைத்து அவர்களோடு கூட சந்தோஷப்பட்டாள். இதுகுறித்து நீங்கள் லூக்.15:8,9 வசனங்களில் தியானிக்கலாம்.

34. அதாவது நாம் திருமணத்தில் பெண்ணுக்கு தாலி/மோதிரம் அணிவிப்பது போன்று அந்நாட்களில் திருமணம் ஆன பெண்கள் தங்கள் தலையில் **தலைமாலை** என்ற ஒன்றை அணிந்து கொள்வாள். அது அந்த பெண் திருமணம் ஆனவள் என்பதற்கு அடையாளமாக இருந்தது. அந்த **தலைமாலையில்** (அந்த வளையத்தை சுற்றி) பத்து வெள்ளிக்காசுகள் பதிக்கப்பட்டிருக்கும். அந்த பத்து வெள்ளிக்காசும் ஒரு பெண் கொண்டிருக்கவேண்டிய பத்து வெவ்வேறு கற்புகளை குறிக்கும். அவள் தன் தலைமாலையில் எப்பொழுதும் அந்த பத்து வெள்ளிச்காசுகளை உடையவளாக இருக்க வேண்டும். ஒன்று காணாமற்போனால் அவள் தன் பத்து கற்புகளில் ஒன்றை இழைந்து போனால் என அர்த்தம். அப்போது அவள் புருஷன் தன் மனைவி தன் பத்து கற்புகளில் ஒன்றை இழந்துவிட்டாள் என கூறி அவளை தள்ளிவிடலாம். அதாவது அவளை விவாகரத்து செய்யலாம். ஆதலால் நாம் தியானிக்கும் அந்த ஸ்திரீ காணாமற்போன அந்த வெள்ளிக் காசை தன் கணவன் வருவதற்கு முன் தேடி கண்டுபிடித்து சந்தோஷப்படுகிறாள்.

35. பாருங்கள் இயேசு கிறிஸ்துவே இங்கு ஒரு பெண் அணிந்திருக்கவேண்டிய விவாக அடையாள சின்னம் குறித்து அதைக்கொண்டு ஒரு உவமையைக் கூறுகிறார். இப்படியிருக்க நாம் திருமண அடையாளச்சின்னம் தேவை இல்லை எனக் கூறலாமா? கூறக்கூடாதே! அது தேவனால் உவமையாகக் கூறப்பட்டுள்ளதே.

36. நமது மக்கள் மத்தியில் மோதிரம் அணியும் பழக்கம் இல்லாததால், ஒரு பெண் மோதிரம் அணிந்திருந்தால் அவள் திருமணமானவள் என்பதை எவரும் அடையாளம் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால் நம் மக்கள் கலாச்சாரத்தின்படி அவள் தாலி அணிந்திருந்தால் உடனே அவள் திருமணமான பெண் என அடையாளம் கண்டு கொள்வார்கள். ஆதலால்தான் நம் மக்கள் கலாச்சாரத்தின்படி நமது பெண்களுக்கு தாலி அணிவிக்க வேண்டுமேயன்றி. மோதிரம் அல்ல என நான் கூறுகிறேன்.

37. ஆக, அமெரிக்க கலாச்சாரத்தின்படி மோதிரம் தான் அணியவேண்டும், தமிழ்மக்கள் கலாச்சாரத்தின்படி தாலி அணியக்கூடாது என்ற உபதேசம் பிசாசினுடையதே. அதற்கு செவி கொடுக்காதீர்கள். அவரவர்கள் தங்கள் சமுதாய, வழக்கத்தை கடைபிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த சமுதாயத்தில் வாழும் அவள் திருமணம் ஆனவள் என தெரியும். அடையாளம் கண்டுகொள்ளப்படும்.

38. ஆக திருமணத்தில் எந்தவிதமான ஒரு அடையாளம் இல்லாதபடிக்கு அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கை, ஒரு உடன்படிக்கை ஆகாது. அங்கு உடன்படிக்கை இல்லை என்று பொருள்படும். உடன்படிக்கைக்கு அடையாளம் ஒன்று நிச்சயமாக வேண்டும். ஆதலால் திருமணமான பெண் தாலி

அணியவில்லை என்றால் அவள் திருமணத்தின் போது எந்தவிதமான உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை என்று பொருள். உடன்படிக்கை இல்லாத ஒரு திருமண வாழ்க்கை அவள் வாழ்கிறாள் என்று பொருள். பாருங்கள் உடன்படிக்கைக்கு அடையாளம் ஒன்று இல்லாவிட்டால் அந்த உடன்படிக்கை சக்தியற்றதாகிறது.

39. மேலும் திருமணத்தின்போது பரிசுத்த வேதாகமத்தை ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்வது உடன்படிக்கைக்கு அடையாளம் அல்ல. கிறிஸ்துக்குள்ளான ஒரு ஆண் பெண் இருவருமே வார்த்தையாக இருக்கிறார்கள். வார்த்தை வார்த்தையை மாற்றிக்கொள்கிறது. அது என்ன?அது அர்த்தமற்றது அது உடன்படிக்கைக்கு அடையாளம் அல்லவே அல்ல. ஆதலால் உங்கள் கள்ளசபையின் /பெந்தெகொஸ்தே சபையின் பாரம்பரிய கள்ள உபதேசத்தை விட்டுவிலகி உங்களை காத்துக்கொள்ளுங்கள். இதுவரை திருமண உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி அணிந்து கொள்ளாத பெண்கள் தாலி அணிந்து கொள்ளும் படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் உங்களை கேட்டுக்கொள்கிறேன். கள்ள சபை இந்த உபதேசத்திற்கு செவி கொடுக்காது. உண்மையான சபையில் உள்ள புத்தியில்லாத கன்னிகைகள் இதற்கு செவி கொடுக்கமாட்டார்கள். ஆனால் உண்மையான சபையில் உள்ள கற்புள்ள, புத்தியுள்ள கன்னிகைகள் இந்த உபதேசத்திற்கு செவிகொடுத்து தங்களை உடனே திருத்திக்கொள்வார்கள் என கர்த்தருக்குள் உறுதி/நிச்சயம் கொண்டுள்ளேன்.

40. சென்னையிலுள்ள ஒரு சபைக்கு நான் செல்லும் போது பெண்கள் தாலி அணிந்து கொள்ளவேண்டும் என்று உபதேசிப்பது உண்டு. ஆனால் அந்த சபை பாஸ்டரின் உபதேசம் பெண்கள் தாலி அணியக்கூடாது என்தாக இருந்தது. அவர் கள்ள சபையாகிய பாரம்பரிய பெந்தெகொஸ்தே சபையிலிருந்த வந்தவர். நான் அங்கு தீர்க்கதரிசியின் செய்தியை பிரசங்கிப்பது வழக்கம். பொதுவாக அந்த சபை மக்கள் தீர்க்கதரிசியின் செய்தியில் இருக்கிறோம் என கூறினாலும் அதன்படி நடப்பதில்லை என்பதையும் நான் அறிவேன். பாஸ்டரைப் போன்று விசுவாசிகள். அவர்கள் தங்கள் பாரம்பரிய பெந்தெகொஸ்தே பழக்கவழக்கங்களை விட்டு வெளிவர மனதில்லாது இருந்தார்கள். அவர்கள் மனம்மாறி இக்காலத்திற்குரிய செய்திக்குள் வந்தாலும் அவர்கள் மனம்மாற்றம் நேர்மையானது அல்ல. என் பிரசங்கத்தைக் கேட்டு சபை மக்களில் பலர் இக்காலத்திற்குரிய செய்தியை ஏற்றுக்கொண்டு தாலி அணிய ஆரம்பித்தனர். காரியம் வித்தியாசமாக போகிறதை அறிந்த பாஸ்டர் முடியாக என்னை தனது சபைக்கு வரவேண்டாம் என்பதை மறைமுகமாக கூறஆரம்பித்தார். நானும் அவரை விட்டு விலகினேன்.

41. ஆதலால் கிறிஸ்துக்குள் எனக்கு பிரியமானவர்களே திருமண உடன்படிக்கைக்கு அடையாளமாக அடையாள சின்னம் ஒன்றை அணியும் விஷயத்தில், நம் நாட்டு வழக்கப்படி அது தாலி. உங்கள் கள்ளசபையும் ஸ்தாபன சபையுமாகிய பெந்தெகொஸ்தே மக்கள் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாதீர்கள் அவர்கள் வழிபாடு வீணாயிருக்கிறதே. பரிசுத்த வேதாகமத்தை ஒருவரைக்கொருவர் மாற்றிக்கொள்வது ஒரு நினைப்பூட்டும் அடையாளச் சின்னம் ஆகாது. தேவனுடைய வார்த்தையை ஒரு உடன்படிக்கைக்கு அடையாளமாக எடுத்து பயன்படுத்தவும் கூடாது. அவ்வாறு பயன்படுத்துவது தேவனை துஷிப்பது ஆகும். வானமும் பூமியும் ஒழிந்துப்போம், தேவனுடைய வார்த்தைகளோ ஒழிந்துப்போவதில்லை. திருமணத்தில் ஆண், பெண் செய்யும் உடன்படிக்கை ஒருவர் இறந்தபின் ஒழிந்து போகிறது. அந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக தேவனுடைய வார்த்தையை உபயோகிக்கலாமா? தேவனுடைய வார்த்தையின் பேரில் சத்தியம் பண்ணலாமா? சற்று சிந்தித்து செயல்படுங்கள். வேதாகமத்தில் அவர்கள் விவாக மோதிரத்தை அணிந்திருந்தார்கள். அது தலைமாலை என்று அப்பொழுது அழைக்கப்பட்டது. அவர்கள் அதை தலையில் அணிந்து கொண்டு இருந்தார்கள்.

42. பாருங்கள், சில நாடுகளில் மோதிரம் அணிகின்றனர். சில நாடுகளில் தாலி அணிகின்றனர். சில இடங்களில் தாலியை தங்கத்தில் அணிகின்றனர். சிலர் பாசி மாலையாக அணிகின்றார்கள். சில பிரதேசங்களில் மஞ்சள் நிற கயிற்றை கட்டுகின்றனர். சிலர் கைகளின் மேல் புஜத்தில் வளையங்களாக அணிகின்றனர். இப்படியாக நாட்டுக்கு நாடு, திருமணத்திற்கு அணியும் அடையாளச்சின்னத்தில் வித்தியாசம் காணப்படுகிறது. அந்த சின்னம் எப்படியாக இருந்த போதிலும், திருமணத்திற்கு அடையாளமாக அதாவது திருமண ஒப்பந்தத்திற்கு/ உடன்படிக்கைக்கு அடையாளமாக ஒன்றை அணிகிறார்கள். அவரவர்கள் தங்கள் கலாச்சாரத்தின்படி அணிகிறார்கள். நீங்கள் உங்கள் கலாச்சாரத்திற்கு மாறாக ஒன்றை அணிய வேண்டாம். அது உங்களை உங்கள் சமுதாய மக்களிலிருந்து வேறுபிரிக்கும். அப்பொழுது உங்கள் சமுதாயத்தில், வசிக்கும் இடத்தில் உள்ள மக்கள் நீங்கள் திருமணம் ஆனவர்கள் என்பதை அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள்.

43.**ஆபரணங்கள் குறித்து வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறது?** பொன்ஆபரணங்களை அணிந்து கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாய் இருக்க வேண்டாம். (1பேது. 3:3). இது ஆங்கிலத்தில் Let it not be that outward adorning of wearning of gold. எனக்கூறப்பட்டுள்ளது. தாலி அணிவது ஒரு அலங்கரிப்பு என்று யாராவது கூறமுடியுமா? அப்படிக் கூறுபவன் பிசாசே, ஏனெனில் அது ஆண்பெண் திருமண வேளையில் செய்துகொள்ளும் உடன்படிக்கைக்கு அடையாளமாக அணிந்து கொள்ளப்படுவதே அன்றி ஒரு அலங்காரத்துக்காக அணியப்படுவது அல்ல. கழுத்தில் செயின் அணிவது, காதில் கம்மல் போடுவது, கைகளில் மோதிரம்

அணிவது, கால்களில் கொலுசு போட்டுக் கொள்வது, கைகளில் வளையல் போட்டுக்கொள்வது, இவையாவும் அலங்கரிப்பே. ஆனால் தாலி அணிந்து ஒரு பெண் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள் என்று யாரும் கூறமுடியாது.

44. மேலும் இந்த தாலியை அவரவர் வசதிகளுக்கேற்றதாக அணிந்துகொள்ளலாம். தங்கத்தில் போட்டுக் கொள்ளலாம். வெள்ளி, கயிறு ஏதாகிலும் ஒன்றை அணிந்து கொள்ளலாம்.அதுதான் முக்கியம். தங்கத்தினால்தான் அணியவேண்டும் என்ற முக்கியத்துவம் கிடையாது. ஆனால் அது தன் சமுதாயத்தின் நடைமுறைகளை பிரதிபலிக்க வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்கள் அந்த பெண் திருமணமானவள் என்று அடையாளம் கண்டுகொள்ளமுடியும். அந்நாட்களில் பெண்கள் தன் கைகளிலே கடகங்களையும், கழுத்திலே சரப்பணிகளையும், நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், காதுகளில் காதணியையும், தலையின் மேல் சிங்காரமான கிரீடத்தையும் தரித்து, இவ்விதமாய் பொன்னாலும், வெள்ளியினாலும் தங்களை அலங்கரித்தார்கள். (எசே16:11-13) தாலி அணிவது இந்த அலங்கரிப்பு அல்ல. அது ஒரு உடன்படிக்கை சின்னம் / அடையாளம்.

45. மேலும் பெண்களுடைய அலங்கரிப்புகள் குறித்து ஏசாயா 3:16-23 வசனங்களை தியானிக்கலாம். தாலி ஒரு ஆபரணப்பட்டியலில் கிடையவே கிடையாது. அது ஒரு உடன்படிக்கைச் சின்னம். அதற்கும் ஆபரணங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அது அணிந்து கொண்டு எந்த ஒரு பெண்ணும் கழுத்தை நெரித்து நடந்து வருபவள் அல்ல. அவள் அதை புனிதமான ஒரு சின்னமாக கருதுகிறாள்.

46. சிலர் திருமணவேளையில் தாலி இத்தனை பவுனில் இருக்கவேண்டும் என அடம்பிடிப்பார்கள். இதுதான் தவறு. அது மேட்டிமையாகிவிடும். ஒருவர் தன் தகுதிக்கேற்றாற்போல் தங்கத்திலோ, வெள்ளியிலோ தாலி செய்து அணிவித்துக் கொள்ளலாம். தங்கத்தில் இத்தனை பவுன்/சவரன் இருக்கவேண்டும் என்ற நிபந்தணை இருக்கக்கூடாது. 1,3,5,7,9,11,13 பவுன், இதெல்லாம் அவர்கள் தகுதி. இதில் அவர்கள் தகுதிக்கு மிஞ்சினது ஆடம்பரம். இந்த ஆடம்பரம் கூடாது. உன் சமுதாயத்தில் தாலியை தங்கத்தில் அணிந்தால் நீயும் அதன்படி அணிந்து கொள். சமுதாயத்தில் வெள்ளியில் அணிந்தால் நீயும் அதன்படி அணிந்துகொள். உன் சமுதாய முறையை மீறாதே. அது உன்னை வேறுபிரிக்கும். உன்னை வித்தியாசப்படுத்தும். அப்போது அது உன்னை அடையாளம் காட்டாது.

**47. ஒன்றை விசுவாசிப்பதற்கு அடையாளம் தேவை**

கப்பர்நகூமிலே இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதிப்பட்டிருந்தான் இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்கு வந்தார் என்று அந்த மனுஷன் கேள்விப் பட்டபோது, அவரிடத்திற்கு போய் தன் மகன் மரணஅவஸ்தையால் இருந்தபடியினாலே, அவனை குணமாக்கும்படிக்கு வரவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார். யோ.4:46-48. ஆம், ஒன்றை விசுவாசிக்க அடையாளம் ஒன்று தேவைப்படுறது. இதற்கு எடுத்துக்காட்டாக சில உதாரணங்களை இங்கு காண்போம்.

48. இந்த எடுத்துக்காட்டு சம்பவத்தை நீங்கள் நீயாயாதி.6வது அதியில் தியானிக்கலாம். கர்த்தருடைய துதனானவர் வந்து அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்பிராவிலிருக்கும் ஒரு கர்வாலி மரத்தின் கீழ் உட்கார்ந்தார். அங்கு கர்த்தருடைய துதனானவர் கிதியோனுக்கு தரினமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடு இருக்கிறார் என்றார். மேலும் கர்த்தர்: நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்: உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். அப்போது கிதியோன்:உம்முடைய கண்களில் இப்பொழுதும் எனக்கு தயவு கிடைத்ததானால் என்னோடே பேசுகிறவர் தேவரீர் தான் என்று எனக்கு ஒரு அடையாளத்தை காட்டவேண்டும் என்றார். பாருங்கள், தன்னோடு பேசுகிறவர் தேவன் தான் என்று விசுவாசிப்பதற்கு ஒரு அடையாளத்தை காண்டவேண்டும் என கிதியோன் கர்த்தரிடம் கேட்கிறான். நாம் ஒன்றை விசவாசிப்பதற்கு அடையாளம் ஒன்று வேண்டும்./ தேவைப்படுகிறது.

49. நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையை கொண்டுவந்து உமக்கு முன்பாக வைக்குமளவும் இவ்விடம் விட்டு போகாதிருப்பீராக என்றான். பின் புளிப்பில்லாத அப்பங்கள், இறைச்சி, ஆணத்தையும்அவரிடத்தில் கொண்டுவந்தான். கர்த்தருடைய துதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பத்தையும் தொட்டார். அப்பொழுது அக்கினி எழும்பி அவைகளை பட்சித்தது. அப்போது கிதியோன் கர்த்தருடைய தூதனை முகமுகமாய் கண்டேனே என்றான்.

50.மேலும் கிதியோன் தேவனை நோக்கி: தேவரீர் சொன்னபடி தன் கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்கப்போகிறீர் என்பதை விசுவாசிக்க சில அடையாளங்களை கேட்டான். இதோ நான் மயிருள்ள ஒரு தோலை களத்தில் போடுகிறேன். பனி தோலின்மேல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருக்கவேண்டும் என்றான். அது அப்படியே ஆயிற்று. மீண்டும் கிதியோன் தேவனை நோக்கி: நான் இன்னும் ஒரு விசைமாத்திரம் பேசுகிறேன். தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும், பூமியெங்கும் பனிபெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான்.

அதுவும் அப்படியே ஆயிற்று.

51. பாருங்கள் இங்கு கிதியோன் இரு காரியங்களை விசுவாசிக்க மூன்று அடையாளங்களை கேட்டான். தேவன் அதை கட்டளையிட்டார். ஒன்று தன்னோடு பேசுகிறவர் தேவன் தான் என்று விசுவாசிக்க, மற்றொன்று தேவன் தன்னை கொண்டு இஸ்ரவேலரை இரட்சிக்க போகிறார் என்பதை விசுவாசிக்க ஆக ஒன்றை விசுவாசிக்க அடையாளம் தேவைப்படுகிறது. இவ்வண்ணமாகவே இந்த பெண் திருமணமானவள் என்பதை விசுவாசிக்க அவள் அணிந்துள்ள தாலி ஒரு அடையாளமாக இருக்கிறது. அதை அணிந்துள்ள பெண் ஒரு மனிதனுடைய சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள் என்பதை விசுவாசிக்க அது ஒரு அடையாளமாக இருக்கிறது. அந்த பெண் ஒருவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவள் என்பதை விசவாசிக்க அது அவளுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது.

52. கர்த்தர் மோசேக்கு தரிசனமானார் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் நம்புவதற்கு/விசுவாசிப்பதற்கு மோசேக்கு மூன்று அடையாளங்கள் கொடுக்கப்பட்டது. (யாத்.4:1-9). ஒன்று மோசே தன் கையிலிருந்த கோலை தரையிலே போட அது சர்ப்பமாயிற்று.அவன் தன் கையை நீட்டி, அதன் வாலைப்பிடித்தபோது அது அவன் கையிலே மீண்டும்கோலாயிற்று. இரண்டாவதாக மோசே அவன் கையை தன் மடியிலேபோட்டு, அதை வெளியே எடுக்கும்போது அவன் கை உறைந்த மழையைப் போன்று வெண்குஷ்டம் பிடித்திருந்தது. தன் கையை மீண்டும் தன் மடியிலே போட்டு, வெளியே எடுத்தபோது, அது திரும்ப அவனுடைய மற்ற கையைப்போல ஆயிற்று. மூன்றாவதாக நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்ற தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாயிற்று.

53. இங்கு பாருங்கள் ஒன்றை விசுவாசிக்க அடையாளங்கள் கொடுக்கப்பட்டது. ஒரு திருமணமான பெண், தன்னை பார்க்கும் பிறர் இவள் திருமணமான ஒரு பெண் என்று விசுவாசிக்க, இவள் ஒரு புருஷனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவள் என்பதை விசுவாசிக்க, இவள் ஒரு புருஷனின் சரீரத்தின் பாகமாக இருக்கிறாள் என்பதை பிறர் விசுவாகிக்க அவளுக்கு அடையாளமாக தாலி கொடுக்கப்பட்டுள்ளது.

54. கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்க மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என விவாசித்து, ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களினால், அதாவது விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்கள். (மாற்.16:17). 1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிசாசுகளை துரத்துவார்கள் 2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் நவமான பாஷைகளை பேசுவார்கள். 3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் சர்ப்பங்களை எடுப்பார்கள். அது அவர்களை சேதப்படுத்தாது. 4. கர்த்தராகிய இயேசு நாமத்தினால் சாவுக்கேதுவான யாதொன்றை குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது. மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.

55. இந்த அடையாளங்கள் விசுவாசிகளை தொடரும். **இது விசுவாசிக்கிறவனால் நடக்கும் அடையாளம் அல்ல. மாறாக விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்**. அதாவது தேவனுடைய சபையில் நடக்கும் அடையாளங்கள். ஒரு சபையில் இந்த அடையாளங்கள் நடக்குமானால் அது தேவனுடைய சபை. அந்த சபையில் தேவனுடைய பிரசன்னம் உண்டு என்று அடையாளம் கண்டுகொள்ளலாம். ஆம் இந்த அடையாளங்களை கொண்டு இந்த சபை தேவஆவியினால் வழிநடத்தப்படும் சபை என நாம் விசுவாசிக்கலாம். அவ்வண்ணமாக ஒரு பெண்அணிந்துள்ள தாலி மூலம் தான் திருமணமானவள், ஒருவனுடைய மனைவி, ஒருவனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டவள் என எடுத்துக் காட்டுகிறாள்.

56. பாருங்கள், அன்று தாமார், தன் கைம்பெண்ணுக்குரிய வஸ்திரங்களை கழைந்துப் போட்டுவிட்டு முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டு, திம்னாவுக்குப்போகிற வழியிலேயுள்ள நீரூற்றுக்கு முன்பாக உட்கார்ந்திருந்தாள். அவள் தன் முகத்தை மூடியிருந்தாள். ஆதலால் அவள் ஒரு வேசி என யூதா கண்டான். பாருங்கள், தாமாருடைய வஸ்திரத்தைக் கொண்டு அவள் ஒரு வேசி என யூதா விசுவாசித்தான். அவளுடைய வெளிப்புற வஸ்திரங்களை கொண்டு அவள் ஒரு வேசி என விசுவாசித்தான். அவளுடைய வஸ்திரம் ஒருவன் அவளை வேசி என நம்புவதற்கு/விசுவாசிப்பதற்கு அடையாளமாக இருந்தது.

57. பாருங்கள் அந்த பெண் திருமணமானவள் என்று நான் விசுவாசிக்கிறேன். ஏனென்றால் அவள் தன் கழுத்தில் தாலி அணிந்திருக்கிறாள். ஒரு பெண் அணியும் செயினுக்கும், தாலிக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு பெண் செயின் மட்டும் அணிந்திருந்தால் அவளை, இவள் திருமணம் ஆகாதவள் என்றுதான் கூறுவார்கள். அவள் செயின் அணிந்து அதன் மத்தியில் தாலி அணிந்திருந்தால் அவள் திருமணம் ஆனவள் என்று கூறுவார்கள். ஆக ஒரு பெண் தாலியைக் கொண்டு அவளிடம் கேட்காமலே, பிறர் அவளைக் குறித்து சொல்லாமலே நாம் அவள் திருமணமானவள் என்று விசுவாசிக்கிறோம். பாருங்கள் செயின் அலங்கரிப்புக்காக அணியப்படுகிறது. ஆனால் தாலி திருமணத்தில் அவள் மற்றும் அவள் புருஷன் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக, அவன் அவளுக்கு தாலியை அணிவிக்கிறான். அது அவள் திருமணமானவள் என்பதற்கு அடையானமாக அவள் கழுத்தில் தொங்குகிறது. அது ஒரு

வெளிப்புற அடையாளம். தாமாருக்கு அவள் ஒரு வேசி என்பதற்கு வெளிப்புற அடையாளமாக அவளது ஆடைகள், ஒரு திருமணமான பெண்ணுக்கு வெளிப்புற அடையாளமாக அவள் அணிந்திருக்கும் தாலி.

58. தேவனுக்கும், பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாக வானவில் இருக்கிறது. (ஆதி.9:1-17) நோவாவின் நாட்களில் தேவன் பூமியின் மேல் நாற்பது நாட்கள் இரவும் பகலும் மழையை வருஷிக்கப்பண்ணி, தான் உண்டாக்கின ஜீவஜந்துக்கள் அனைத்தையும் பூமியின் மேல் இராதபடிக்கு நிக்கிரகம் பண்ணினார். ஏனெனில் மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகிற்று. அவனது இருதயத்து நினைவுகளின் தோற்றம் நித்தமும் பொல்லாததாக கர்த்தர் கண்டார். ஜலப்பிரளயத்திற்குப் பின் தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி: நான் உங்களோடும், உங்களுக்கு பின் வரும் சந்ததியோடும், உங்களோடு பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனி பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், காட்டுமிருகங்களோடும் உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டுமிருகங்களோடும், என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். இனி மாம்சமானவைகளையெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லை என்றும் பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லை என்றும் உங்களோடு என் உடன் படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார். நான் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாய் இருக்கும். அந்த வில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின் மேல் உள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூறும்படிக்கு அதைநோக்கி பார்ப்பேன் என்றார்.

59.ஆம் தேவனுடைய உடன்படிக்கைக்கு அடையாளமாக வானவில் மேகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்றும் அதை நாம் காண்கிறோம். நாம் அதை காணும்போது தேவன் ஜலப்பிரளயத்தினால் இனி பூமியை அழிக்கப்போவதில்லை என தேவனுடைய உடன்படிக்கையை நினைவுகூர்ந்து அதை விசுவாசிக்கிறோம். அவ்வாறாகவே ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதை விசுவாகிக்க அவள் அணிந்துள்ள தாலி எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் திருமணவேளையில் செய்த உடன்படிக்கையை நினைவு கூறுவதற்கு அடையாளமாக தாலி உள்ளது. ஒரு உடன்படிக்கையின் அடையாளத்தை கலாச்சரம் என்று கூறமுடியுமா? அப்படி கூறுவது அறிவீனம். திருமணம் இப்பிரபஞ்சத்திற்கு உரியது. மத். 22:20, மாற். 12:33.

60. பேதுரு அந்த சப்பாணியை பார்த்து என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலதுகையினால் அவனை பிடித்து தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். இது என்ன? விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள். தேவனுடைய வசனத்திற்கு சாட்சியாக நடந்த அடையாளம். (அப்.3:1-8). ஆம் தேவனுடைய வசனத்திற்கு சாட்சியாக (2கொரி. 6:15). ஒரு விசுவாசி, ஒரு விசுவாசியை திருமணம் செய்து கொள்ளும்போது அவர்கள் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி அணியப் படுகிறது. அது வேதப்பூர்வமானது.

61. நூற்றுக்கு அதிபதி ஒருவன் இயேசுவினிடத்தில் வந்து, ஆண்டவரே என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான். இயேசு: நான் வந்து அவனை சொஸ்தமாக்குவேன் என்றார். நூற்றுக்கு அதிபதி நீர் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான். இயேசு: நீ போகலாம், நீ விசுவாசித்தப்படியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாளிகையிலே அந்த வேலைக்காரன் சொஸ்தமானான். (மத்.8:5-13),இது என்ன? விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். (மாற்.9:23). அந்த நூற்றுக்கு அதிபதி விசுவாசத்திற்கு அடையாளமாக அவனுடைய வேலைக்காரன் சொஸ்தமானான். திருமணத்திலும் ஒரு ஆணும் பெண்ணும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள விசுவாசத்துக்கும் அன்புக்கும் அடையாளமாக ஆண், பெண் கழுத்தில் தாலி அணிவிக்கிறான். தாலி அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கைக்கு விசுவாசத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

62. நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் செய்தல் ஒரு அடையாளம். (ஆதி.17:11-13, லேவி.4:11). நீங்கள் உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ண கடவீர்கள், அது எனக்கும் உங்களுக்கும் உள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாக உங்கள் தலைமுறை, தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளைஎல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். இப்படி என் உடன்படிக்கையை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது. ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக என்னப்பட்டது. அவன் தேவனை அதாவது தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தான். தேவனுடைய கட்டளைகளுக்கும், பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்தான். அவனுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக என்னப்பட்டது. எப்பொழுது? அவன்விருத்த சேதனமில்லாதிருந்தபோதே. விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசித்தான். அவனுடைய நீதிக்கு தேவனுடைய வார்த்தைமேல் வைத்த விசுவாசத்தினால் அமைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தை தன் சரீரத்தில் பெற்றான்.

63. ஆக ஒரு பெண்ணும், ஆணும் தாங்கள் திருமண வேளையில் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அடையாளமாக, அவர்கள் செய்த சட்டபூர்வமான, நீதியான செயலுக்கு முத்திரையாக, புருஷன் தன் சரீரத்தின் பாகமாகிய தன் மனைவிக்கு தாலியை கட்டுகிறான். அது அவள் கழுத்தில் தன் கணவன் உயிரோடு இருக்கும்மட்டும் காணப்பட வேண்டும். இந்த அடையாளத்தை அவள் தன் கழுத்தில்தான் அணியவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. ஆனால் அவள் தன் சமுதாயத்தின் நடைமுறைப்படி அணிந்து கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம்.

**64. ஒன்றை மெய்ப்பித்துக்காட்ட அடையாளம் தேவை**

பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுரு: இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளை கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்.2:22. இங்கு வெளிப்படுத்திக் காட்டினார் என்பதற்கு மெய்ப்பித்துக் காட்டினார் என பொருள்படி ஆங்கிலத்தில் உள்ளது. (Approved of God) ஆம், ஒன்றை மெய்ப்பித்துக் காட்ட/ உறுதிப்படுத்த அடையாளம் தேவைப்படுகிறது.

65. ஆரோனின் புத்திரராய் இராத அந்நியன் ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் தூபம்காட்ட வராதபடிக்கு, இதை மெய்ப்பித்துக் காட்ட, பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில் ஒவ்வொரு கோலாக பன்னிரெண்டுக் கோலை வாங்கி அவனவன் கோலில் அவனவன் பேர் எழுதப்பட்டது. லேவினுடைய கோலின் மேல் ஆரோனின் பெயர் எழுதப்பட்டது. பின் அவைகள் யாவும் ஆசரிப்புக் கூடாரத்திலே தேவன் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப் பெட்டிக்கு முன்னே வைக்கப்பட்டது. மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்திற்குள் பிரவேசித்தபோது இதோ லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது. அது துளிர்விட்டு, பூ பூத்து, வாதுமை பழங்களை கொடுத்தது.

66. ஆம் ஒன்றை மெய்ப்பித்துக் காட்ட அதாவது உறுதிப்படுத்த அடையாளம் ஒன்று தேவைப்படுகிறது. இதை நீங்கள் எண். 16 மற்றும் 17 அதிகாரங்களில் தியானிக்கலாம். அவ்வாறாகவே ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதை மெய்ப்பித்துக்காட்ட, நிருபித்துக் காட்ட, உறுதிப்படுத்த அவள் அணிந்திருக்கும் தாலி அடையாளமாக உள்ளது.

67. இதோ, அந்த பிரசங்கி பிரசங்கம் பண்ணும்போது, சூடான வெந்நீர் அடிக்கடிக் குடிக்கிறார். மற்றொருவர் கூல்டிரிங்ஸ் குடித்துக்கொண்டேயிருக்கிறார். மூன்றாம் நபர் சீரகத் தண்ணீர் குவளையை கையில் வைத்துக்கொண்டே பிரசிங்கிக்கிறார். இது என்ன? இது எதற்கு அடையாளம்? அவர்கள் தேவனுடைய மனுஷர் அல்ல. அவர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வில்லை. (1பேது. 1:12) என அர்த்தம். அதாவது அவர்கள் பரிசுத்த ஆவியினால் பிரசங்கிக்க வில்லை. ஆதலால் அவர்கள் பிரசங்கிக்கும்போது நாக்கு வரண்டு போகிறது. தாகத்திற்கு தண்ணீர் தேவைப்படுகிறது. அது அவர்கள் பரிசுத்த ஆவியினால் பிரசங்கிக்க வில்லை என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது. உறுதிப்படுத்துகிறது. இதற்கு அவர்கள் குடிக்கும் தண்ணீர் எடுத்துக் காட்டாக, அடையாளமாக உள்ளது.

68. இதோ அந்த பிரசங்கியைப் பாருங்கள், அவர் சுமார் 3 மணி நேரங்கள் பிரசங்கித்தார். அவளுடைய நாக்கு வரண்டுபோக வில்லை. அவருக்கு தாகம் எதுவும் இல்லை. இது எதை மெய்ப்பித்துக் காட்டுகிறது? அவர் தேவ பலத்தினால் 3 மணி நேரங்கள் நின்று பிரசங்கித்தார் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது. ஆம். பிரியமானவர்களே ஒன்றை மெய்ப்பித்து காட்ட ஒரு அடையாளம் தேவை. ஆம், அந்த பெண் திருமணமானவள் என்பதை அவள் அணிந்துள்ள தாலி மெய்ப்பித்துக் காட்டுகிறது.

69. இஸ்ரவேல் ஜனங்களுக்கும் எகிப்தியருக்கும் உள்ள வித்தியாசத்தை மெய்ப்பித்துக் காட்ட அடையாளம். யாத்.8:23 நான் உன்மேலும், உன் ஊழியக்காரர் மேலும், உன் ஜனங்கள் மேலும், உன் வீடுகள் மேலும் பல விதமான வண்டுகளை அனுப்புவேன். என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன். இந்த அடையாளம் நாளைக்கு உண்டாகும். யாத்.8:21-23. பாருங்கள் தேவனுடைய சொந்த ஜனங்களுக்கும் எகிப்தியருக்கும் உள்ள வித்தியாசத்தை மெய்ப்பித்துக்காட்ட அடையாளம். அவ்வண்ணமாகவே ஒரு திருமணம் ஆனவளுக்கும், ஆகாதவளுக்கும் உள்ள தோற்றத்தை மெய்ப்பித்துக் காட்ட ஒரு பெண் தாலி திருமணத்தின்போது அணிந்து கொள்கிறாள். தாலி அணிந்த பெண் திருமணமானவள். தாலி அணியாத பெண் திருமணம் ஆகாதவள். ஆக திருமணம் ஆனவளுக்கும், திருமணம்ஆகாதவளுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக்காட்ட தாலி அடையாளமாக உள்ளது.

70. ஒருவன் அப்போஸ்தலன் என்பதை மெய்ப்பித்துக் காட்ட அவனிடம் காணப்படும் அடையாளங்கள். 2கொரி.12:12. அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான (அ) பொறுமையோடும் (ஆ) அதிசயங்களோடும் (இ) அற்புதங்களோடும் (ஈ) வல்லமையோடும் உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே. இந்நாட்களில் நமது மத்தியில் தங்களை அப்போஸ்தலர் என அழைத்துக்கொள்ளும் மனிதர்களிடம் இந்த அடையாளங்கள் காணப்படுகிறதா? காணப்பட்டால் அவர்கள் தங்களை அப்போஸ்தலர் என

மெய்ப்பித்துக் காட்டுகிறார்கள். மேற்கூறிய அடையாளங்கள் காணப்படாவிட்டால் அவர்கள் தங்களை கள்ள அப்போஸ்தலர்கள், கள்ள கபடமுள்ள வேளையாட்கள் என மெய்ப்பித்துக் காட்டுகிறார்கள். ஆக ஒன்றை மெய்ப்பித்துக் காட்ட அடையாளம் தேவைப்படுகிறது. மும்பை அப்போஸ்தலர் மேற்கூறிய அடையாளங்களை மெய்ப்பித்துக் காட்டுகிறாரா? இல்லவே இல்லை. அவர் தன்னை அப்போஸ்தலன் என்று விளம்பரப் படுத்திக் கொண்டால், அது போதாது. அடையாளம் தேவைப்படுகிறது. அவ்வாறாகவே தான் திருமணமானவள், தன் கணவனுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டவள் என்பதை மெய்ப்பித்துக் காட்ட, அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி அணிந்து கொள்கிறாள்.

71. **இரத்தம் ஒன்றை மெய்ப்பித்துக் காட்ட அடையாளமாக இருந்தது.** யாத்.12அதி. கர்த்தருடைய பஸ்கா இராத்திரியிலே கர்த்தர் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய்; எகிப்து தேசத்தில்உள்ள மனிதர் முதல் மிருகஜீவன்கள் மட்டும், முதற்பேராயிருக்கிறவைகளை எல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்கள் மேல் நீதியை செலுத்தும் நாளில், நீங்கள் வசிக்கும் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேல் சட்டத்திலும் இரத்ததை தெளித்து அவர்கள் இருக்கும் வீட்டில் அந்த இரத்தம் அவர்களுக்கு அடையாளமாக இருக்க கட்டளையிட்டார். அந்த இரத்தத்தை கர்த்தர் கண்டு கடந்துபோவார். கர்த்தர் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும்வாதை அவர்களுக்குள்ளே வராதிருக்கும். யாத்.12.அதி.

72. பாருங்கள் இரத்தம் ஒன்றை மெய்ப்பிக்க அடையாளமாய் இருந்தது. எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் உள்ள வீடுகளின் வித்தியாசங்களைக்காட்ட, வீடுகளை மெய்ப்பித்துக் காட்ட இரத்தம் அடையாளமாக இருந்தது. சங்காரத்தூதனுக்கு இது எகிப்தியரின் வீடு, இது இஸ்ரவேலரின் வீடு என்பதை மெய்ப்பித்துக் காட்ட இரத்தம் அடையாளமாக இருந்தது. அவ்வாறாகவே ஒரு பெண் தாலி அணிந்திருப்பது ஒரு அடையாளம். அவள் ஒரு மனிதனுடைய மனைவி என்பதை அந்த வெளிப்புற அடையாளத்தின் மூலம் ஒரு ஆண் புரிந்துக் கொண்டு, அறிந்து கொண்டு அவளை அணுகமாட்டான். அங்கு சங்கார தூதனிடமிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இரத்தம் அடையாளம். இங்கு தன் கணவன் அல்லாத பிற மனிதர்களிடமிருந்து தன் கற்பை காத்துக்கொள்ள தாலி ஒரு அடையாளம். தாலி ஒரு வெளிப்புற அடையாளம். பாருங்கள் அதற்கு ஒரு நோக்கம் உண்டு, ஒரு அர்த்தம் உண்டு.

73. **நெற்றியில் அடையாளம்.** கர்த்தர் சணல் நூல் தரித்து, தன் அறையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற புருஷனைக் கூப்பிட்டு, அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளின் நிமித்தம் பெருமுச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றியில் அடையாளம் போடு என்றார். பின்பு அவர் மற்றவர்களை நோக்கி : நீங்கள் இவன் பின்னாலே நகரமெங்கும் உருவப்போய் வெட்டுங்கள். உங்கள் கண் தப்பாமலும் நீங்கள் இரங்காமலும், முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும், சங்கரித்து கொண்டுபோடுங்கள்: அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள். என் பரிசுத்த ஸ்தலத்திலே துவங்குங்கள் என்று சொன்னார். எசே.9அதி.

74. பாருங்கள் இங்கு நெற்றியில் அடையாளம் இல்லாத ஜனங்களை வேறுபிரித்து, அதை மெய்ப்பித்துக் காட்ட அடையாளம் தேவைப்பட்டது. அவ்வாறாகவே தாலி திருமணமானப் பெண்ணையும், திருமணம் ஆகாத பெண்ணையும் வேறுபிரிக்கிறது. தாலி ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதை மெய்ப்பித்தக் காட்டுகிறது. ஒரு திருமணம் ஆன பெண்ணிடம் எவனும் சிலுமியம் பண்ணாதபடி அந்த அடையாளம் அவளை அவன் நெருங்காதப்படிக்கு எச்சரிக்கிறது. அந்த அடையாளம் அவளைப் பாதுக்காக்கிறது. அது பிறகுக்கு ஒரு எச்சரிக்கையின் அடையாளமாக இருக்கிறது. அங்கு அவர்கள் நெற்றியில் அடையாளம் போடப்பட்டார்கள். இங்கு பெண் கழுத்தில் தாலியுடன் அடையாளம் காட்டப்படுகிறாள்.

75. **காயீன்மீது ஒரு அடையாளம்.** காயீன் மற்றும் ஆபேல் இருவரும் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயின் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி, அவனைக் கொலைசெய்தான். கர்த்தர் காயீனை நோக்கி: இந்த பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தை பயிரிடும்போது அது தன் பலனை இனி உனக்கு கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாய் இருப்பாய் என்றார். அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி; இன்று என்னை இந்த தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர். நான் உமது சமூகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாய் இருப்பேன்: என்னை கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னை கொன்றுபோடுவானே என்றான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனை கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி, காயீனை கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனை கொன்றுபோடாதபடிக்கு கர்த்தர் அவன் மேல் ஒரு அடையாளத்தை போட்டார். (ஆதி 4. அதி)

76. பாருங்கள் கர்த்தர் காயீன் மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். அதை ஒருவன் கண்டு அவனிடம் நெருங்கமுடியாது. அவனை எவனும் கொலை செய்யமுடியாது. அந்த அடையாளம் அவன் தேவனால் பாதுக்காக்கப்பட்டவன் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது. அவ்வண்ணமாகவே ஒரு திருமணம் ஆனபெண்ணை எவனும் கண்டு, அவள் அணிந்துள்ள தாலியைக் கண்டும் அவள் வேறு ஒருவனுடைய மனைவி என்பதை அறிந்தும், அவளோடு சயனிக்க அவன் முற்பட்டால், சயனித்தால்,அதற்குரிய தண்டனையைப் பெறுவான். நாட்டுச் சட்டத்தின்படி தேவபிரமானத்தின்படி, கட்டளையின்படி தண்டனைப்

பெறுவான். ஆம், அவன் அவளை சேராதிருப்பதற்கு அவளை விட்டு விலகி நிர்ப்பதற்கு அடையாளமாக அவளுக்கு ஒரு அடையாளாம் கொடுக்கப்பட்டுள்ளது. அதுதான் தாலி. இந்த அடையாளம் மூலம் அவளைப் பாதுகாக்கப்படுகிறாள். ஆம் அந்த பெண் மீது தாலி ஒரு அடையாளம். அந்த அடையாளம் அவள் தேவனால் பாதுகாக்கப்பட்டவள் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

77. சிகப்பு **கயிறு ஒரு அடையாளம்.** யோசுவா எரிகோவை வேவுபாக்க இரு மனுஷர்களை அனுப்பினான். அவர்கள் எரிகோ சென்று அங்கு ராகாப் என்னும் பேர் கொண்ட ஒரு வேசியின் வீட்டில் தங்கினார்கள். இது எரிகோவின் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது. இராஜா அவர்களை வெளியே கொண்டுவர தன் ஆட்களை அனுப்புகிறான். ராகாப் அந்த இரு மனுஷரையும் ஒளித்து வைக்கிறாள். அவர்களுக்கு தயவுசெய்து, பின் அவர்களை கயிற்றினாலே ஜன்னல்வழியாய் இறக்கிவிடுகிறாள். அவர்கள், தங்கள் வழிசென்று தப்புகிறார்கள். இந்த தயவுக்காக அவளுக்கு அவள் குடும்பத்தை தப்புவிக்க ஒரு அடையாளத்தை கொடுத்தார்கள். அதாவது: அவள் சிகப்பு நூல் கயிற்றை வீட்டின் ஜன்னலிலே கட்டி, தன் குடும்பத்தினரை தன் வீட்டிலே சேர்த்துக் கொள்ள வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எரிகோவைப் பிடிக்கும்போது, இந்த சிகப்பு நூல் கயிற்றைப் பார்த்து அவளையும் அவள் குடும்பத்தினரையும் தப்புவிக்க அது ஒரு அடையாளமாக இருந்தது. முடிவில் ராகாப் மற்றும் அவள் குடும்பத்தினர் தப்புவிக்கப்பட்டார்கள்.

78. ஆம், இந்த சிகப்பு நூல் கயிறு ராகாப் மற்றும் அவள் குடும்பத்தினரை மெய்ப்பித்துக் காட்டி அவர்களை தப்புவித்துக் கொள்ள ஒரு அடையாளமாக இருந்தது. அவ்வண்ணமாகவே ஒரு தாலி ஒரு திருமண அடையாளமாக இருந்து, அவளை எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள ஒரு அடையாளமாக இருக்கிறது. அந்த அடையாளத்தைப் பார்த்து பிறர் அவளை நெருங்குவது இல்லை. அந்த தாலி அவள் திருமணம் ஆனவள் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது.

79. **ஒரு சம்பவத்தை நினைப்பூட்ட அடையாளம் தேவை.** கற்கள் நினைப்பூட்டும் அடையாளம். யோசுவா, இஸ்ரவேல் புத்திரர்களில் கோத்திரத்துக்கு ஒவ்வொருவராக பன்னிரெண்டு பேரை அழைத்து, நீங்கள் யோர்தானின் மத்தியில் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பெட்டிக்கு முன்பாக கடந்துபோய் உங்களுக்குள்ளே ஒரு அடையாளமாக இருக்கும்பொருட்டு, இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் இலக்கத்திற்கு சரியாக, உங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கற்களை தன் தோலின்மேல் எடுத்துக்கொண்டுப்போங்கள். நாளை அந்த கற்கள் ஏதென்று உங்கள் பிள்ளைகள் உங்களை கேட்கும்போது, நீங்கள்: கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக யோர்தானின் தண்ணீர் பிரிந்துபோனதால் அவைகள் வைக்கப்பட்டிக்கிறது: யோர்தானை கடந்து போகிறபோது யோர்தானின் தண்ணீர் பிரிந்து போயிற்று. இந்த கற்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு என்றைன்றுக்கும் நினைப்பூட்டும் அடையாளம் என்று சொல்லுங்கள் என்றான். இதை நீங்கள் யோசுவா 4 அதியில் தியானிக்கலாம்.

80. பாருங்கள் இந்த கற்கள் நினைப்பூட்டும் அடையாளமாக, அதாவது ஒரு சம்பவத்தை நினைப்பூட்டும் அடையாளமாக இருந்தது. அவ்வாறாகவே திருமணத்தில் ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு அணியும் தாலி அவர்கள் திருமண வேளையில் செய்த உடன்படிக்கையை நினைப்பூட்டும் ஒரு அடையாளச் சின்னமாக இருக்கிறது.

81. இதோடு மட்டுமா? யோசுவா 24 அதிக்கு வாருங்கள். யோசுவா அந்நாளில் சீகேமிலே இஸ்ரவேல் ஜனங்களோடே உடன்படிக்கைப் பண்ணி, அவர்களுக்கு அதைப் பிரமாணமும் நியாயமுமாக ஏற்படுத்தினான். அந்த வார்த்தைகளை யோசுவா தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதி ஒரு பெரிய கல்லை எடுத்து, அதை அங்கே கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் அருகில் இருந்த கர்வாலி மரத்தின் கீழே நாட்டி எல்லா ஜனங்களையும் நோக்கி, இதோ, இந்த கல் நமக்குள்ளே சாட்சியாக இருக்கக்கடவது. கர்த்தர் நம்மோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் இது கேட்டது: நீங்கள் உங்கள் தேவனுக்கு விரோதமாகப் பொய் சொல்லாதபடிக்கு, இது உங்களுக்கு சாட்சியாய் இருக்கக்கடவது என்றான். பாருங்கள் அவ்வண்ணமாகவே ஒரு ஆணும், பெண்ணும் தங்கள் திருமணத்தின்போது செய்த உடன்படிக்கைக்கு சாட்சியாக ஆண் பெண்ணுக்கு தாலி அணிவிக்கிறான். அந்த தாலி அவர்கள் செய்த உடன்படிக்கையை கேட்டது. அது அவர்கள் செய்த உடன்படிக்கைக்கு சாட்சியாக அந்த பெண்ணிடம் காணப்படுகிறது. ஆம், தாலி அவர்களுக்குள் சாட்சியாக இருக்கிறது.

82. **ஞானஸ்நானம் ஒரு நினைப்பூட்டும் அடையாளம்.** நாம் எடுக்கும் தண்ணீர் ஞானஸ்நானமானது மாம்சஅழுக்கை நீக்குதலாய் இராமல்: தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. (1பேது.3:21) பாருங்கள் இது ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என விசுவாசிக்கிறான். அந்த விசுவாசத்துக்கு அடையாளமாக தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்கிறான். ஞானஸ்நானம் ஒரு அடையாளம். அதை எடுத்தவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தரித்துக் கொள்கிறார். அவ்வண்ணமாகவே ஒரு பெண் திருமணம் ஆனவள், ஒரு ஆணுடன் திருமணத்தில் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கை செய்து கொண்டாள் என்பதற்கு அடையாளமாக தாலி அணிந்து கொள்கிறாள். பாருங்கள், அவன் அவளுக்கு ஆண்டவன். சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல அவள் அவனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அங்கு ஞானஸ்நானம் பிரத்தியட்சமாக, வெளிப்படையாக, திருச்சபைக்கு முன்பாக

எடுக்கப்படுகிறது. அவ்வண்ணமாகவே இங்கு தாலி திருச்சபையின் முன்பு ஒரு ஆண் பெண் தங்களுக்குள் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக பெண் தாலி அணிந்து கொள்கிறாள். அங்கு விசுவாசி ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவை தரித்துக் கொள்கிறான். இங்கு ஒரு பெண் தாலி அணிந்து ஒருவனை தன் சரீரமாக ஏற்று, பெற்றுக்கொள்கிறாள். அவள் இப்பொழுது அவன் சரீரத்தின் ஒரு பாகமாகிறாள். அவள் அணிந்திருக்கும் தாலி அவன் சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள் என்பதை நினைப்பூட்டும் ஒரு சின்னமாக அவள் கழுத்தில் தொங்குகிறது. அதைப் பார்க்கும்போது அவள் தான் அவன் சரீரத்தின் ஒருபாகம் என்றும், இவன் அவள் சரீரத்தின் பாகம் என்றும் நினைவுபடுத்திக் கொள்கிறார்கள்.

83. சில மேதாவிகள் ஒரு பெண் தாலி அல்லது மோதிரம் அல்லது ஏதாவது ஒரு திருமண அடையாளம் அணிந்திருந்தாள் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை என்கிறார்கள். இதில் வளசரவாக்கம் பேரும் அடிபடுகிறது. இது தவறு. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என விசுவாசிக்கிறவன், தன் நல்மனச்சாட்சிக்கு அடையாளமாக அவனும் தண்ணீர் ஞானஸ்நானம் மூலம் கிறிஸ்துவோடு கூட மரித்து அடக்கம்பண்ணப்பட்டு உயிரத்தெழுகிறான். இந்த விசுவாசத்திற்கும் அந்த நபர் அணிந்துள்ள திருமண அடையாள சின்னத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இதெல்லாம் ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபையின் சுய நீதி. நாம் சுயநீதியை உற்பத்தி செய்ய வேண்டிய தேவையில்லை. தேவநீதி தான் நமக்கு தேவை.

84. இது குறித்து தீர்க்கதரிசி என்ன கூறுகிறார். நசரீன் மக்களே, விவாக மோதிரத்தை அணிந்துள்ள ஒரு ஸ்திரீக்கு நீங்கள் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை என்று எனக்கு தெரியும். அந்த மனப்பான்மை அவசியம் இல்லை என நினைக்கிறேன். வேதாகம காலத்தில் அவர்கள் விவாகமோதிரங்களை அணிந்திருந்தனர். அது **தலைமாலை** என்று அப்பொழுது அழைக்கப்பட்டது. அது அவர்கள் தலையில்அணிந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒன்பது வெள்ளிகாசுகள் இருந்தன. அவர்கள் விவாகமானவர்கள் என்பதை காண்பிக்க. அது சரிஎன்று நான் நினைக்கின்றேன். **கே.ப.283,** பத்தி 66

85.ஆபரணங்கள் எல்லாம் ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து வந்தன. கம்மல், வர்ணங்கள், நகைகள், நெக்லஸ், ஹாட்டென்ட்டாட் காட்டிலிருந்து வந்தன. அவைகள் அஞ்ஞானிகளின் ஆபரணங்கள். கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளாக இருக்கவேண்டும் என வேதாகமம் கூறவில்லை.(**சபையும் அதன் நிலையும்**, பத்தி 136) பெண்கள் பொண் ஆபரணங்களை அணிந்து தங்களை புறம்பாக அலங்கரிக்கக் கூடாது. (1பேது.3:3, 1 தீமோ.2:9) காதுகளில் கூட லோலாக்குகளை (Ear rings) அணியக்கூடாது. (**ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை**, பக்கம் 25, பத்தி 2 மற்றும் 3) காதணிகள் எதுவும் அணியக்கூடாது. (**கடைசி கால செய்தியாளன்,** பத்தி 216) இவைகள் யாவும் உன்னை அழகுபடுத்துவதாகும். எரே.4:30 மெத்தடீஸ்ட்களாகிய நீங்கள் மூக்குத்திகளும், காதணிகளும் அணிகிறீர்கள். அவைகள் பிசாசின் பக்கசேனல்கள் போல் காட்சியளிக்கின்றன. (**சர்ப்பத்தின் வித்து,** பக்கம் 56) கர்த்தரும் இஸ்ரவேல் புத்தரரிடம் உங்கள் ஆபரணங்களை கழற்றிப் போடுங்கள். அப்பொழுது நான் உங்களுக்கு செய்யவேண்டியதை அறிவேன் என்று கூறினார். யாத்.33:5,6. பாருங்கள் ஆசீர்வாதத்துக்கு ஆபரணங்கள் ஒருதடையாய் உள்ளன. உன் கழுத்தில் செயின், மூக்கில் மூக்குத்தி, காதில் கம்மல், கையில் வளையல்கள், காலில் கொலுசு, இடுப்பில் ஒட்டியாணம் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு தடையாகவே உள்ளது.

86. **யோவான் ஸ்நானனுக்கு ஒன்றை நினைப்பூட்ட ஒரு அடையாளம்.** யோவான் ஸ்நானனுக்கு ஒரு அடையாளம் கொடுக்கப்பட்டது. அதாவது ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்கிறாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர். அந்தப்படியே அவன் கண்டு : இயேசு, தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்தான். யோ.1:32-34. அவ்வாறாகவே திருமணம் ஒரு பெண்ணுக்கு அடையாளமாக கொடுக்கப்பட்டது. நமது மாநில கலாச்சாரத்தின்படி அது தாலி. ஒரு பெண் அணிந்திருக்கும் தாலியைப் பார்த்து ஒருவன் இவள் திருமணம் ஆனவள் என சாட்சிக் கொடுக்கலாம். அவள் திருமணம் ஆனவள் என்று சாட்சி கொடுப்பதற்கு அவள் அணிந்துள்ள தாலி ஒரு அடையாளமாக இருக்கிறது.

87. **ஓய்வுநாள் ஆசரித்தல் ஒரு நினைப்பூட்டும்அடையாளம்.** நீங்கள் (இஸ்ரவேல் புத்திரர்) என் ஓய்வுநாளை ஆசரிக்கவேண்டும்: உங்களை பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாய் இருக்கும். ஆகையால் ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக: அது உங்களுக்கு பரிசுத்தமானது. ஆறு நாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும உண்டாக்கி ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார். இது குறித்து நீங்கள் யாத்.31:13,17 மற்றும் எரே.20:12,20 வசனங்களில் தியானிக்கலாம்.

88. சபைகாலங்களில் கூட வாரத்தின் முதலாம் நாள் சபைக்கூடுதல் ஒரு அடையாளமாக, ஒன்றை நினைப்பூட்டும் ஒரு சம்பவமாக இருக்கிறது. நம்முடைய வாரத்தின் முதலாவது நாள் சபைகூடுதல் எதை நினைப்பூட்டும் அடையாளமாக இருக்கிறது?

(அ) வாரத்தின் முதலாம் நாள் கர்த்தர் உயிர்த்தெழுந்தார். மத்28:1-10,

(ஆ) வாரத்தின் முதலாம் நாள் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது. அப். 2:1-4

(இ) அன்றுதான் இரட்சிப்பின் திட்டம் கொடுக்கப்பட்டது. அப்.2:38
(ஈ) அன்றுதான் சபை ஸ்தாபிக்கப்பட்டது.அன்று மூவாயிரம் பேர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றனர். அவர்களைக் கொண்டு சபை ஸ்தாபிக்கப்பட்டது. அப். 2:41, 47.

89. இந்த சம்பவங்களை நினைப்பூட்ட, வாரத்தின் முதலாம் நாள் சபைக்கூட ஆரம்பித்தது. 1கொரி 16:2. இவ்வாறாக ஒரு ஆண், பெண் தங்கள் திருமண நாளில் செய்த உடன்படிக்கையை நினைப்பூட்ட ஆண் பெண்ணுக்கு தாலி அணிவிக்கிறான். அந்த தாலியைக் காணும்போது அவர்கள் தங்கள் திருமணநாள் அன்று செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்து கொள்கிறார்கள். ஆக திருமணமான ஒரு பெண் அணிந்திருக்கும் தாலி: (அ) அவள் திருமணம் ஆனவள் என்ற விசுவாசத்தை ஒருவனுக்குள் கொண்டுவருகிறது. (ஆ) அவள் திருமணம் ஆனவள் என்பதை மெய்ப்பித்து காட்டுகிறது. (இ)அவள் அணிந்துள்ள தாலி ஆண்பெண் திருமணத்தில் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாய் இருக்கிறது. (ஈ) ஆண் பெண் திருமணத்தில் செய்த உடன்படிக்கையை நினைப்பூட்டும் அடையாளமாக தாலிஇருக்கிறது.

90. முடிவாக உங்களுக்கு பரிசுத்த ஆவி உண்டு என்று கூறி, பின் நீங்கள் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்திற்குரிய செய்தியை பின்பற்றாமல், ஸ்தாபன சபைகளின் உபதேசங்களை, கள்ள சபையின் பாரம்பரியங்களை, வேசி மற்றும் வேசியின் குமாரத்திகளுடைய போதனைகளை பின்பற்றுவீர்களானால், கடைப்பிடிப்பீர்களானால் உங்களுக்குள் இருப்பது வேறொரு ஆவி. ஸ்தாபன சபைகளின், விசேஷமாக பெந்தெகொஸ்தே சபைகளின் மேட்டிமைகள் யாவும் சேற்றுக் குவியல்களுக்கு சமானம் என்பதை அறிவீர்களா? பாருங்கள் தேவனுடைய ஆவி தேவனுடைய வார்த்தையின் மேல் தங்கிஇருக்கும். ஆதலால் நான் மேலே எழுதியுள்ள பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு சமாதானமும் இரக்கமும் உண்டாவதாக. ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபைகளின் உபதேசங்களை, பிரமானங்களை கக்கிப்போடுங்கள், வாந்திப்பண்ணிப் போடுங்கள். அவர்கள் வழிகளில் சோரமாக்க்கமாய் நடவாதிருங்கள். அவர்களுடைய பாரம்பரியம் மாறுபாடான போதகம்.

91. சகோதரரே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்

கிறிஸ்துவின் அன்பில்
பிப்ரவரி / 2008
**சகோ. காலேப் யோசுவா**

# கிறிஸ்தவ திருமணம் திருமணமண்டபத்திற்குரியதா?

1.கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்திஅடையவதற்காக கர்த்தர் எங்களை மேய்ப்பராக ஏற்படுத்தியுள்ளார் என்று பறைசாற்றிக்கொண்டு மந்தைக்கு பின் மாதிரியாக நடந்துவரும், மந்தைக்கு மாதிரியற்று நடந்துவரும் கள்ள கபடமுள்ள வேலையாட்களைக் குறித்து அவ்வப்பொழுது எழுதி அவர்களை விட்டு உங்களை வேறுபிரித்துக் கொள்ளுங்கள் என்று உங்களை எச்சரித்து வந்துகொண்டே இருக்கிறேன். நீங்களோ ஆரோக்கியமான உபதேசங்களை பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி உங்கள் சுய இச்சைகளுக்கு ஏற்ற போதகர்களை உங்களுக்கு திரளாக சேர்த்துக்கொண்டு, சத்தியத்திற்கு செவியை விலக்கி, வணங்கா கழுத்துள்ள ஜனங்களாய் இருக்கிறீர்கள். நாங்கள் படுகுழியில் விழத்தான் செய்வோம் என்று நீங்கள் உறுதிக்கொண்டு இருக்கும்போது; நான் என்ன செய்ய முடியும்? என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்கு பின் செல்கிறது என்கிறார் ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

2. இந்நாட்களில் விசேஷமாக இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளோம். நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என்று கூறுகிறவர்கள் மத்தியில் அவர்கள் இல்லத் திருமணம் பெரும்பாலும் திருமண மண்டபங்களில்/ களியாட்டு ஸ்தலங்களில்/ பொதுஜனங்கள் கூடும் இடங்களில் நடைபெறுகின்றன. அதை அவர்கள் மேய்ப்பர்கள் ஊக்குவிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள்தான் அப்படிப்பட்ட திருமணத்திற்கு தலைமை ஏற்று நடத்தி வைக்கிறார்கள். இதை கண்டித்து உங்களுக்கு எழுதி உணர்த்த வேண்டியது என்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. இந்த புதிய ஆண்டு தொடக்கத்தில் நடந்த ஒரு திருமண வைபவம் என்னை இந்த செய்தி தொகுப்பை எழுத ஊக்குவித்தது.

3. இந்த திருமணவீட்டார் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் தங்களுக்கு சபைகூடுதலுக்குச் செல்ல தகுந்த ஒரு சபைஇல்லை என பிரதிவாரம் ரூ.200/- ரூ.300/- செலவு செய்து தூரத்தில் உள்ள ஒரு சபைக்கு சென்று வருகிறார்கள். நல்லது. அவர்களது பக்தி வைராக்கியம் பாராட்டப்படத்தக்க ஒன்று. அதேநேரத்தில் தங்கள் இல்ல திருமணத்தை ஒரு பொதுமக்கள் கூடும் இடத்தில் நடத்தியது ஏன்? சபைகூடுதலுக்கு காட்டும் பக்தி வைராக்கியம், திருமணத்தில் காட்டப்படாதது ஏன்? திருமண

காரியங்கள் அசட்டை செய்யப்பட்டது ஏன்? பாஸ்ட்டரைப் போன்றுதான் விசுவாசிகள். பாஸ்டர் திருமணத்திற்கு திருப்பதி செல்ல ஆயத்தம். அவரது விசுவாசிகள் விவாகத்திற்கு வாரனாசிக்கும், வந்தவாசிக்கும் செல்ல ஆயத்தம். பாஸ்டரும் பிசாசுக்கு அடிமை, விசுவாசியும் பிசாசுக்கு அடிமை. அதுதான் காரியம்.

4. தன்னை பெரிய பாஸ்டராக அலட்டிக்கொள்ளும் பெரவலூர் பாஸ்டரின் பின்மாதிரிக்கு இங்கு ஒரு எடுத்துக்காட்டு. இதை அவர் தன்னுடைய நிரந்தரமான பணியாக/தொழிலாக/ ஊழியமாக கொண்டுள்ளார். இந்நாட்களில் இவர் சபைக்கு சென்றுவரும், நான் மேற்கூறிய குடும்பத்தில் திருமணம் நடந்தது. அந்த திருமணத்தை இவர் ஒரு திருமண மண்டபத்தில்/பொதுமக்கள் கூடும் ஸ்தலத்தில் நடத்தி வைத்தார். இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவ தற்கான ஒரு ஆரோக்கியமான நடைமுறையா? செயலா? இது ஒரு கள்ள கபடமுள்ள வேலைக்காரனின் நடபடிகள் என்று எனக்குள் உள்ள ஆவியில் உணர்கிறேன். நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்? இந்த உலகத்தின் ஆவியை உடையவர்களுக்கு இதில் வித்தியாசம் ஒன்றும் தெரியாது. அவர்களுக்கு எல்லாவற்றிலும் கனம் உள்ள விவாகமானது தேவனுடைய பிள்ளைகள் ஆராதனைக்கு கூடிவரும் தேவனுடைய சபையில் நடந்தால் என்ன? அல்லது பொதுமக்கள் கூடும் இடங்களில் நடந்தால் என்ன? இரண்டிற்கும் வித்தியாசம் அவர்களுக்குத் தெரியாது. பெரவலூர் பாஸ்டருக்கும் அதன் வித்தியாசம் தெரியாது.

5. பாருங்கள் ஒரு ஸ்தாபன சபை பாஸ்டர்கூட தன் சபையிலுள்ள விசுவாசிகளின் திருமணத்தை, தான் தன் சபையாரோடு ஆராதிக்கும் சபைகூடும் இடத்திலே நடத்தி வைக்கிறதை நான் கண்டிருக்கிறேன். அவரிடம் ஆரோக்கியமான ஒழுங்குமுறை காணப்படுகிறது. காரியம் இப்படி இருக்க ஸ்தாபன சபை பாஸ்டர்களை குறைகூறும் இந்த நபரிடம் இப்படிப்பட்ட ஆரோக்கியமற்ற செயல்பாடுகள் காணப்படுகிறது என்ன? அதை நீங்கள் பொறுத்துக்கொள்வது என்ன?அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள் என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறதே! தன் செயல்பாடுகளில், தன் நடபடிகளில் ஒரு முன்மாதிரியற்ற ஒரு மேய்ப்பன் தேவனுடைய மந்தையை எப்படி வழிநடத்த முடியும்? சற்று நிதானமாக சிந்தித்துப்பாருங்கள். கோபப்படாதீர்கள். பொறுமையை கடைபிடியுங்கள். இந்த பின்மாதிரி இந்த பாஸ்டரின் ஒரு ரெகுலர் நடபடியாக இருந்து வருகிறது. இவரை விட ஸ்தாபன மேய்ப்பர்கள் எவ்வளவோ மேல் என தெரிகிறது. இவரது சபையும் ஒரு ஸ்தாபன சபை போன்றே இயங்கிவருகிறது.

6. உதாரணத்திற்கு ஒன்று. பொதுவாக ஸ்தாபன சபைகளில் கிறிஸ்துமஸ், ஈஸ்டருக்கு கட்டிடம் நிரம்பி ஜனக்கூட்டம் வழியும். ஜனங்களுக்கு இருக்க இடம் இருக்காது. வெளியே நாற்காலிகள் போட்டு, அல்லது ஜனங்களை தரையில் உட்காரவைப்பார்கள். அந்த அளவுக்கு கூட்டம்இருக்கும் ஆனால் பிரதி ஞாயிறு சபை கூடுதலுக்கு வரும் ஜனங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இதில் கால் பாகம் கூட இருக்காது. ஏனென்றால் சபை மக்கள்யாவரும் பண்டிகை திருவிழா நாட்களுக்கான ஜனங்களே. அதேபோல்தான் பெரவலூர் சபையிலும் 2008 ஜனவரி முதல் தேதி ஆராதனை இருந்தது என ஒரு சகோதரர் என்னிடம் சொல்லக் கேட்டேன். இந்த சபையில் ஆவிக்குரிய ஜனங்களை காண்பது அறிதாக இருக்கிறது. ஆனால் ஆவிக்குரிய ஜனங்கள் இல்லவே இல்லை என நான் கூறமாட்டேன். ஆவிக்குரிய ஜனங்கள் அதிகம் காணப்படாததினால் தான் இங்கு பாஸ்டருடைய ஆதிக்கம் அதிகம். ஆவிக்குரிய என் ஜனங்களே கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயுள்ள என்உடன் மறுபிறப்புக்களே உங்களுக்கு அங்கு என்ன வேலை? அவளைவிட்டு வெளியேவாருங்கள்? வெளிமான் வேட்டைக்காரன் கைக்கும்,குருவி வேடன் கைக்கும் தப்புவதுபோல, நீங்கள் உங்களை தப்புவித்துக்கொள்ளுங்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் உங்களை அழைக்கிறேன். எனக்கு செவிகொடுப்பவர்கள் எத்தனைப்பேர்?

**7. உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் ஐக்கியம் கொள்ள தெரிந்து கொள்ளும் சபை மிக மிக முக்கியத்துவத்திற்குரியதாகும். நீங்கள் போக விரும்பும் சபையை தெரிந்து கொள்ள உங்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. நீங்கள் எந்த சபையைச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற தெரிந்துக் கொள்ளுதல் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள முழு உரிமையாகும். நீங்கள் உங்கள் ஐக்கியத்துக்காக சபை தெரிந்தெடுக்கும் சமயம் அது உங்களை நித்தியத்துக்கு வழி நடத்துமா என்பதை குறித்து மிகவும் உறுதியாக அறிந்திருக்கவேண்டும். உண்மையாக மறுபடியும் பிறந்தவர்களைக் கொண்டுள்ள சபை பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலை பெற்றிருக்கும். அது சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக இருக்கும்.**

8. நீங்கள் ஒரு சபைக்கு சென்று முதற்கட்டமாக அதன் மேய்ப்பனை கவனியுங்கள். வழக்கமாக அவர் எப்படி நடந்து கொள்கிறாரோ அப்படியே அந்த சபையைச் சேர்ந்தவர்களும் நடந்துகொள்வார்கள். சபை பரிசுத்த ஆவிக்குப் பதிலாக ஒரு சபை மேய்ப்பனுடைய ஆவியைப் பெற்று, அவன் எவ்வாறு நடந்துகொள்கிறனோ அப்படியே சபையும் நடந்து கொள்கிறது. பாருங்கள் சபை மேய்ப்பன், தன் சபையின் ஆராதனை இடத்தில், தேவனை தொழுது கொள்ளும் இடத்தில் தேவனுடைய பிள்ளைகளின் திருமணத்தை நடத்தி வைக்க தவறுவதால், அதில் அவர் முன் மாதிரியாக, மந்தைக்கு சாட்சியாக இல்லாததினால் அவர் சபையைச் சேர்ந்த விசுவாசிகளும் தங்கள் இல்லத்தின் திருமணத்தை பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும், அருவருப்புமான சகலவித பறவைகளுடைய கூடுமாகிய பொது இடங்களில் நடத்தி வைக்கவே நாடுகிறார்கள். பாஸ்டரின் பின்மாதிரியை விசுவாசிகளும் பின்பற்றுகிறார்கள்.

9. இவர்களுக்கு திருமணத்தின் முக்கியத்துவம் தெரியவில்லை. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் இருக்கிறது என எபி.13:4ல் வாசிக்கிறோம். Marriage is honourable in all. அதாவது விவாகம் யாவற்றுக்குள்ளும், எல்லாவற்றிலும் கனமுள்ளதாய் இருக்கிறது. இந்த உலகில் அநேக காரியங்கள் கனத்திற்குரியது. நாம் நம்முடைய தகப்பனையும், தாயையும் கனம் பண்ண வேண்டும். யாத். 20:12. நாம் நம்மை ஆளும் ராஜாக்களை, ஆளுநர்களை கனம் பண்ணவேண்டும். 1பேது.2:17. நமக்கு வயதில் முத்தவர்களை கனம் பண்ண வேண்டும். லேவி.19:32 பொதுவாக நாம் எல்லா மனிதர்களையும் கனம் பண்ண வேண்டும். 1பேது 2:17. ஆனால் இவை யாவற்றுக்குள்ளும், இவை எல்லாவற்றிலும் விவாகம் கனத்திற்குரியது. ஏனென்றால் இது ஒரு மறுபிறப்பு அடைந்த, பரிசுத்த ஆவியைப் பெற்ற, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாயுள்ள ஒரு விசுவாசியின் திருமணம் . ஆதலால் இது கிறிஸ்துவுக்கும், அவருடைய சரீரத்திற்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. அதாவது இந்த விவாகம் கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய மனவாட்டி சபைக்கும் உள்ள தொடர்புக்கு இருந்துவரும் அடையாளமாய் இருக்கிறது. Marriage reflects Christ and the Church. தியானியுங்கள் எபே. 5:22,23. இயேசு மணவாளன். மாற். 2:18-20, யோ 3:29. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை- மணவாட்டி. 2கொரி.11:2. அவ்வாறாகவே புருஷன் - மணவாளன். ஸ்திரீ (மனைவி)- மணவாட்டி. ஆகையால் ஒருவன் விவாகத்தை அற்பமாய் எண்ணக்கூடாது. விவாகத்தை அற்பமாய் எண்ணி அதை கண்டகண்ட இடங்களில் வைத்து நடத்துபவர்கள், நடத்திவைப்பவர்கள் முரண்பாட்டின் விதையே.

10. காரியம் இப்படியிருக்க திருமணத்தை ஒரு பொதுஸ்தலங்களில் வைத்து நடத்தலாமா? திருமணம் புனிதமானது அல்லவா? கனத்திற்குரியது அல்லவா? அப்படியானால் அதை நாம் தேவனுடைய பிள்ளைகள், தேவனை பயபக்தியாக ஆராதிக்கும் ஸ்தலத்தில் வைத்துத்தானே நடத்தவேண்டும்? அதுதானே ஆரோக்கியமான நடைமுறை! திருமணத்தை திருமண மண்டபங்களில் பொதுஸ்தலங்ளில் வைத்து நடத்தும் பாஸ்டர்கள் நம்மத்தியில் நிறைய உண்டு. அந்த பாஸ்டர்கள் யாவரும் கள்ளகபடமுள்ள வேலையாட்களே. அவர்கள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தபடாமல், இந்த உலகத்தின் ஆவியினால் வழிநடத்தப்படுபவர்கள். நான் அறிய இதில் பொன்னேரி பாஸ்டரும் விதிவிலக்கு அல்ல. அவரும் பெரவலூர் பாஸ்டரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். இருவரும் கர்த்தரால் தம்முடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய பாஸ்டராக ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல.

11. முதலாவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாயுள்ளவர்கள் தன் குடும்ப திருமணத்தை தான் கூடிவரும் சபையிலே நடத்துவார்கள். சபைகூடிவரும் இடம் சிறிதாகவோ, பெரிதாகவோ இருக்கலாம். இதில் தடை ஒன்றும் இல்லை. இவர்கள் பொது ஸ்தலங்களில் திருமணத்தை நடத்தமாட்டார்கள். அடுத்து அந்த சபை பாஸ்டர் ஒரு உத்தமும் உண்மையுமான தேவமனுஷராக இருப்பாராகில் அவர் தன் சபை சம்மந்தப்பட்ட திருமணத்தை தம் சபையிலே நடத்தி வைப்பார். திருமண மண்டபங்களுக்கு செல்ல மாட்டார். ஆக தனக்கென்று ஒரு சபை இருந்தும், திருமணத்தை திருமண மண்டபங்களில் நடத்தும் ஒருவன் முதலில் விசுவாசியே அல்ல. அந்த திருமணத்தை நடத்திவைக்கும் பாஸ்டரும் ஒரு உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரன் அல்ல. இருவருமே மயிலின் இறகுகளை தங்கள் இறகுகளுடன் வைத்துக் கொண்டு மயிலை போன்று நடனமாடும் காகமே. இவர்கள் தாங்கள் குறைகூறும் ஸ்தாபன சபை பாஸ்டர்களைவிட விசுவாசிகளை விட கேடுகெட்டவர்கள்.

12. தன்னுடைய வழிகளில் தாறுமாறான பாஸ்டரோடு சேர்ந்துகொண்டு, தன்னுடைய வழிகளையும் தாறுமாறாக்கி, தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைத்துக் கொண்டு, திருமணம் எல்லாவற்றிலும் கனத்திற்குரியது அது கிறிஸ்துவுக்கும், அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கவேண்டும் என அறிந்தும், தங்கள் இல்லத்து திருமணத்தை திருமண மண்டபத்தில் நடத்தியது எனக்கு ஆச்சரியமாகவும், எனது புத்திக்கு எட்டாததுமாய் இருக்கிறது. நீங்கள் மேட்டிமையானதினால் பைத்தியமாய் நடந்து, துர்சிந்தனையுள்ளவர்களாய் இருக்கிற படியினால், உங்கள் கைகளினால் இனியாவது உங்கள் வாயை முடுங்கள்.

13. உங்களை மணவாட்டி, மணவாட்டி என அழைக்கும் சகோதரனே, சகோதரியே, கிறிஸ்து உங்களை விக்ரகாராதனைக்காரர்களும், கிறிஸ்துவை அறியாதவர்களும், உலக பிரகாரமான மக்களும், பொதுமக்களும் தங்கள் இல்ல திருமணத்தை நடத்தும் திருமண மண்டபத்திலாவைத்து திருமணம் செய்யப்போகிறார்? சற்று சிந்தித்து பார்க்கமாட்டீர்களா? உங்கள் திருமணத்தை தேவன் பரலோகத்தில் தம்முடைய வீட்டில் வைத்து அல்லவா நடத்தப்போகிறார்! ஒரு திருமண மண்டபம் உங்கள் தேவன் வீட்டுக்கு இணையாகுமா? சற்று யோசிக்கமாட்டீர்களா? பூமியில் அவருடைய வீடு நம்முடைய ஜெபவீடு, அது நாம் தேவனை ஆராதிக்கும் இடம் என்பதை மறந்துவிட்டீர்களா? தியானியுங்கள் மத்.21:13, ஏசா.56:7, எரே. 7:11. நீங்கள் ஒரு உலகத்தானுடைய திருமண மண்டபத்தை தேவனுயை வீடாக்கியது என்ன? உங்களது ஜெபவீடாக்கியது என்ன? இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் உங்கள் மீது இரக்கம் பாராட்டுவாராக! உங்கள் பாஸ்டர் உங்களை மோசம் போக்குகிறதை நீங்கள் அறியாதிருக்கிறது என்ன? **இது சிந்திக்கும் காலம் மற்றும் செயல்படும் வேளையாய் இருக்கிறது.**

14. **திருமணம் என்பது தேவனுடைய வீட்டிற்குரியது.** ஆதலால் திருமணத்தை ஐந்து வகை ஊழியங்களில் அல்லாத ஒருவரைக்கொண்டு நடப்பிக்கக் கூடாது. ஐந்து வகை ஊழியத்திலுள்ள எந்த ஊழியக்காரனையும் கொண்டு நடப்பிக்கலாம். பாஸ்டரைக்கொண்டுதான் நடப்பிக்க வேண்டும் என்ற

கூட்டாயம் இல்லை. ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டரின் வரிசை நான்காவது தான். ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டரைவிட உயர்ந்த ஸ்தானத்தில்மூன்றுபதவிகள் உள்ளன. ஆதலால் அவர்களைக் கொண்டும் திருமணத்தை நடத்து விக்கலாம்.

15. சில பெரிய பெரிய பட்டணங்களில் சபை கூடுதலுக்கு பொது ஸ்தலங்களை வாடகைக்கு எடுத்து உபபோகிக்கிறார்கள் என்கின்றனர். பொதுவாக அவர்கள் திருமண மண்டபங்கள், ஹோட்டலில் ஹால்கள், திரையறங்குகள் இப்படிப்பட்ட பொதுமக்கள் கூடும் இடங்களில் சபை கூடுதல் நடைபெறுவதால்அங்கு திருமணத்தை நடத்தலாமா என கேட்கிறார்கள். அது கூடவே கூடாது. இப்படிப்பட்ட இடங்களில் சபை கூடிவருவதும் தவறு. தேவனுடைய சபை கூடும் இடம் ஒரு புனிதமானதாக இருக்கவேண்டும். சபை கூடுதல் தேவனுடைய பிள்ளைகள் ஒருவரது வீட்டில் கூடினாலும் அந்த இடத்தின் புனித தன்மை காக்கப்படவேண்டும். சில கிராமபுற இடங்களில் சபைகளே இல்லை. அங்கு திருமணத்தை பொதுஸ்தலங்களில் நடத்திவைக்கவேண்டிய நிர்பந்தம் உள்ளது. கர்த்தர் நம் இருதயத்தை அறிவார். இப்படிப்பட்ட சூழ்நிலைகளையும், சம்பவங்களையும் மத்.12:1-8. வசனங்களுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். நானும்இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து சில திருமணங்களை நடத்திவைத்திருக்கிறேன்.

**16. முடிவாக கிறிஸ்தவ திருமணம் திருமணமண்டபத்திற்குரியது அல்ல. மாறாக அது தேவனுடைய வீட்டிற்குரிய ஒன்றாகும். இது குறித்து கே.ப.342 தியானியுங்கள். அது இவ்வாறாக கூறுகிறது: விவாகம் என்பது தேவனுடைய வீட்டுக்குரிய ஒன்று (பத்தி 154)சபை உங்களை விவாகம் செய்து வைத்திருக்க வேண்டும்- சபை போதகர். அதுவே ஒரு கிறிஸ்தவன் செய்ய கூடிய நாணயமான காரியம். (பத்தி 160) இதன் கருத்து என்ன? விவாகம் தேவனுடைய சபையில், சபையில் உள்ள போதகனைக் கொண்டு நடத்தி வைக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ விவாகம் பொது ஸ்தலமாகிய ஒரு திருமண மண்டபத்தில் வைத்து நடத்திவைக்கப்படக் கூடாது. அப்படி நடத்திவைப்பவர்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்களே! இது உறுதி. கிறிஸ்தவ நாணயத்தை விட்டு விலகுபவன் யார். கனமுள்ள ஒரு கிறிஸ்தவ விவாகத்தை ஒரு திருமண மண்டபத்தில் வைத்துநடத்தி அதை ஈனமாக்கும்/ கனவீனமாக்கும் பாஸ்டர் பிசாசு என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.**

17. தேவனுயை மனுஷன், ஒரு உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஊழியக்காரன் எல்லாவற்றிலும் தன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பிக்கிறவனாகவும் குற்றம் கண்டு பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தை போதிக்கிறவனாயும், போதிக்கிறவனாக மட்டுமல்ல அதன்படி நடக்கிறவனாயும் இருப்பான். நீங்கள் சத்திய ஆவியை பெற்றிருந்தால், சத்திய ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்திச் செல்வார்.

18. ஈசாக்கு ரெபெக்காளை தன் தாய் சாராளுடைய கூடாரத்திற்கு அழைத்துக் கொண்டு போய் அவளை தனக்கு மனைவியாக்கிக் கொண்டு அவளை நேசித்தான். ஆதி. 24:67. கர்த்தர் ஆரவாரத்தோடும் பிரதான துதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும். வானத்திலிருந்து இறங்கிவருவார். அவருடைய மணவாட்டி அவருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பாள். 1தெச. 4:16,17. தேவன் பரலோகத்தில் வீற்றிருக்கிறார். ஆதலால்தான் அவருடைய மணவாட்டி அங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறாள்.

19. ஆனால் நீயோ மாறுபாடான சந்ததியே உன்னை கிறிஸ்துவின் மணவாட்டி என அழைத்துக் கொண்டு, உன் சரீரத்தின் பாகமாகிய அந்தப் பெண்ணை ஒரு களியாட்டு மண்டபத்துக்கு கூட்டிச் சென்று, ஒரு சமூக நல கூடாரத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவளை உனக்கு மனைவியாக்கிக் கொள்கிறாயே, இது உனக்கு ஒரு வெட்கக்கேடு. உன் பாஸ்டரும் குருடன், நீயும் குருடன். உன் பாஸ்டரும் முரண்பாட்டின் விதை. நீயும் முரண்பாட்டின் விதை. அதுதான் அது உங்களுடைய கிரியைகள் நீங்கள் யார் என்பதை வெளிக்காட்டுகிறது. என்று நீங்கள் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கைகளைக் கொண்டு நீங்கள் போகும் ஐக்கியம் கொள்ளும் சபையை தெரிந்து கொண்டீர்களோ அன்றே நீங்கள் மரித்தீர்கள்.

20. திருவசனத்திற்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு கீழ்ப்படியாத உங்களை கிறிஸ்துவின் மணவாட்டி, மணவாட்டி என்று கூறி உங்களை மோசம்போக்கும் மேய்ப்பர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருந்து உங்களை காத்துக்கொள்ளுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் ஆவியுடனே கூட இருப்பாராக. கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

பிப்ரவரி/2008

**சகோ. காலேப் யோசுவா.**